# நம் வழி வேளாண்மை

பருவம் 25 | ஏப்ரல் – ஜூன் 2015 | இதழ் 1



## இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

# நம்வழி வேளாண்மை

பருவம் 25 ஏப்ரல் – ஜுன் 2015 இதழ் 1

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

**நம் வழி வேளாண்மை தத்துவம்**

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

## கனவு காணுவோம் கனவு காணுவோம் – கலாமே
## கனவு காணுவோம் கனவு காணுவோம்

"தெய்வம் தொழாள் கொழுநற் றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

ஒரு பெண்மணி தன் கணவனுக்கு செய்ய வேண்டிய கடமையை கண்ணும் கருத்துமாக முழு ஈடுபாடுடன் செய்து வந்தாலே கடவுளை வணங்காமலேயே சித்துக்கள் வந்து விடுகின்றது. அப்படிப்பட்ட பெண்மணி மழை வேண்டி வேண்டினால் மழை பெய்வது தவறாது என்று வள்ளுவர் கூறுகிறார். இதன்படி அவரவர்களுக்குடைய கடமையை முழு ஈடுபாடுடன் செய்து வருபவர்கள் அனைவருக்கும் இந்த உயர்ந்த நிலை கிட்டும் என்றால் அது மிகையாகாது. இவர்கள் நினைக்கும் எண்ணங்கள் எளிதில் கைகூடும். இதற்கு எடுத்துக்காட்டு நமது முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் கடைபிடித்த உயர்ந்த வாழ்க்கை. அதாவது இலட்சியத்துடன் கூடிய உயர்ந்த வாழ்க்கை. இலட்சியத்தை அடைவதற்கு அவர் ஏறிய படிக்கட்டுகள் பிரம்மசரியம், எளிமை மற்றும் பற்றற்ற வாழ்க்கை. இதனால் இவர் எண்ணிய எண்ணங்கள் பல கை கூடின: இந்தியா ராக்கட் ஏவுகணை விட்டது, ஜனாதிபதியானது, பிறப்பது சம்பவம் ஆனால் இறப்பது சரித்திரமாக வேண்டும் என்று கூறிய கூற்று போன்ற இலட்சியக் கனவுகள் நனவானது. இவர் சமுதாயத்தில் உயர்ந்த விஞ்ஞானியாகவும், ஜனாதிபதியாகவும் திகழ்ந்தாலும் எளிமையாக வாழ்ந்து பிரம்மச்சரிய விரதம் பூண்டு கடமையில் கடைசி மூச்சு வரை அயராது மாணவர்களுக்கு எழுச்சி ஊட்டி வந்தார். உற்றார் உறவினருக்கு ஓர் எல்லையுடன் இணக்கம் கொண்டு கடமை ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தது இளைஞர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. இன்றைய இளைஞர்களும் நமது தாய் நாட்டிற்காக உண்மை, தியாகம், புலனடக்கம், எளிமையான வாழ்க்கை முறையை கடைபிடித்தால் அவர்களின் இலட்சியக் கனவும் நனவாகும்.

கனவு காணுவோம் கனவு காணுவோம் –கலாமே
கனவு காணுவோம் கனவு காணுவோம்
கனவுகள் நனவாகட்டும்

– ஆசிரியர்

## மக்கள் ஜனாதிபதி அப்துல்கலாம்

பல கோடி மக்களின் மனதில் ஓர் இடத்தை பிடித்தவர் அப்துல்கலாம் என்றால் மிகையாகாது. இவர் சமூகத்திலோ அல்லது அரசிலோ ஒரு பெரிய தன்னிகரற்ற தலைவர் என்பதை விட மனிதநேயம் கொண்ட மாமனிதர். எல்லா அந்தஸ்திலுள்ள மக்களும் இவரை எளிதில் அணுக அனுமதி கொடுத்தார். அவர்களுடன் சேர்ந்து போட்டோ எடுக்கவும் சம்மதித்தார். சாதாரண விவசாயிகள், வைத்தியர்கள், கைவினைஞர்களின் கண்டுபிடிப்புகளை ஆர்வமாகப் பார்த்து அவர்களை மேலும் விஞ்ஞானிகளாக்கவும் சிறந்த படைப்பாளர்களாக்கவும் அக்கறை காட்டினார். தேனிகுழுமம் என்ற அமைப்பு தன்னார்வ உறுப்பினர்கள் (Honey bee Network) மூலம் அறிமுகப்படுத்திய கண்டுபிடிப்பாளர்களுக்கு விருது கொடுக்கும் நிகழ்ச்சியை பல கூட்டங்களிலும் எடுத்து சொல்லி பெருமைபட்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் அஹமதாபாத்திலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்திற்கு வருகை தந்து மாணவர்களுக்கு பாடம் நடத்தி இக்னைட் (IGNITE, by National Innovation Foundation ) என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தேசிய அளவில் நல்ல கண்டுபிடிப்புகளை உருவாக்கிய மாணவர்களுக்கு பரிசு கொடுத்து கௌரவித்துள்ளார். ஒரு முறை கிரிஸ் ஆனந்த் என்ற முதல் வகுப்பு படிக்கும் 5 வயது தமிழ் நாட்டு மாணவியை கையால் தூக்கி பரிசு கொடுத்துள்ளார். மற்றொரு முறை புதுடெல்லியில் நடந்த பரிசளிப்பு நிகழ்ச்சியில் உடல் ஊனமுற்ற ஒரு நபருக்கு அவர் அமர்ந்துள்ள இருக்கைக்கே சென்று பரிசு கொடுத்தது மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். இது போன்ற நிகழ்வுகள் சாதாரண மக்களின் நெஞ்சத்தில் ஆழமாக பதிந்துவிடுகிறது.

அஹமதபாத்திலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் மூன்று ஆண்டுகள் கிரிட் (GRIIT) என்ற பாட திட்டத்தில் வகுப்புகள் என்னுடன் சேர்ந்து நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தியுள்ளார். இதில் கலந்து கொண்ட மாணவர்களின் இலட்சியங்களை பல மடங்கு உயர்த்தியுள்ளார். தேனீ குழுமம் சார்பாக நடைபெற்ற உலகளாவிய அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் கருத்தரங்கில் கலந்து கொண்டு சாதாரண விவசாயிகள், பள்ளி ஆசிரியர்கள், ஆதி வாசிகள், மாணவர்களுடன் இரண்டற கலந்து ஒவ்வொருவரையும் இருக்கையில் அமரச் செய்தும் அவர்களுடன் புகை படம் எடுக்கவும் சம்மதித்துள்ளார். நமது நாடு உயர்ந்த இலக்கை அடைய புத்தகங்களை எழுதியுள்ளார். ஆனால் ஒரு சிலரே இவரது பண்பாடான யாரையும் ஒதுக்காமல் எல்லோரையும் புது முயற்சியில் ஈடுபடுத்தும் அனுகு முறையை கண்டு வியந்துள்ளனர். ஒரு முறை டி.ஆர்.டி.ஓ (DRDO) ல் இவர் விஞ்ஞானியாக இருக்கும் போது ஆயுதங்களை வெடிக்க செய்யும் ஒரு கம்யூட்டர் சாப்ட்வேர் ஒன்று உருவாக்க ஒரு விஞ்ஞானியிடம் வேலை கொடுத்துள்ளார். அவர் பலவாறு முயன்றும் முடிக்க முடியவில்லை . கலாம் அவர்களுக்கு இதில் அவ்வளவாக நிபுணத்துவம் இல்லை. இருப்பினும் ஒவ்வொரு வாரமும் அவர் எப்படி முயற்சி எடுத்துள்ளார் என்பதை கூற கேட்டு வருவார். இந்த சிறு உற்சாகமே அந்த விஞ்ஞானியை சாப்ட்வேரை வெற்றிகரமாக முடிக்க செய்ய வைத்தது. இவர் பள்ளி மாணவர்களை உற்சாகப்படுத்துவதில் நமது நாட்டுடன் இல்லாமல் உலகெங்கிலும் செய்து வந்துள்ளார். இவருடைய இழப்பு நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு குடி மகனையும் சொந்த இழப்பாக ஆக்கியுள்ளது. இவர் 2020ல் இந்தியா வளர்ச்சி பெற்ற நாடாக உருவாக வேண்டும் என்று விரும்பியுள்ளார். இது நடப்பது சந்தேகம் என்றாலும் ஒவ்வொருவரும் மனதில் உறுதி மொழி எடுத்து கொண்டு இந்த இலக்கை அடைய சிறிது காலம் கூட எடுத்து கொண்டாலும் பரவாயில்லை என்று தோன்றுகின்றது.

முதல் முறையாக தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் சார்பாக (மதுரை சேவா சங்கம் இதனுடன் இணைந்து செயல்படும் தொண்டு நிறுவனமாகும் ) அடித்தள கண்டுபிடிப்பாளர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஜனாதிபதி மாளிகையில் கலாம் அவர்களை அனுகினேன். இதற்கு அவர் ஒத்து கொண்டார். இதனால் இவர் ஜனாதிபதியாக இருந்த காலம் தொட்டு இது நாள் வரை கண்டுபிடிப்பாளர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி ஜனாதிபதி மாளிகையில் நடப்பது மட்டுமல்லாமல் ஜனாதிபதியே கலந்து கொள்வது உற்சாகத்தை அளிக்கிறது.

இவர் இளம் விஞ்ஞானியாக மும்பையில் விக்ரம் சாராபாயின் கீழ் வேலை பார்த்து வந்தார். அப்பொழுது விக்ரம் சாராபாயி வாரம் ஒரு முறை மும்பையிலிருந்து அஹமதாபாத்திற்கு இரயிலில் பயணம் செய்தார். அச்சமயம் மாணவர்களையும் இளம் விஞ்ஞானிகளையும் தன்னுடன் உட்கார செய்து அவர்களின் சந்தேகங்களை போக்குவார். இந்த மாணவர்கள் அஹமதாபாத் வரை உடன் சென்று பின்னர் மறு இரயிலில் திரும்பி வருவார்கள். இதே போல்தான் அப்துல்கலாம் அவர்களும் சாதாரண

அடித்தள கண்டுபிடிப்பாளர்கள், பள்ளி மாணவர்களுடன் பேசுவதற்கு நேரத்தை ஒதுக்குவார். ஒரு முறை இவருடைய விமானம் புறப்படுவது தமாதமாகி விட்டது. அச்சமயம் மாணவர்களுடன் கலந்துரையாடலை இரவு 2 மணி வரை நீடித்து விட்டார். நாங்கள் நடத்தும் தேனீ என்ற ஆங்கில பத்திரிக்கைக்கு (தமிழில் நம் வழி வேளாண்மையாக மதுரை சேவா மூலம் 3 மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகிறது ) தலையங்கம் எழுதியுள்ளார். ஒரு முறை ஜனாதிபதி மாளிகையில் கண்டுபிடிப்பாளர்களுடன் கூட்டம் நடைபெற்ற சமயம் ஒரு விவசாயிக்கு அமர்வதற்கு தானே நாற்காலியை கொண்டு வந்து உட்கார வைத்தது மனதில் நெகிழ்வை ஏற்படுத்தியது. ஒவ்வொரு வருடமும் கலாமின் பிறந்த நாள் அன்று கண்டுபிடிப்புகளை உருவாக்கும் சிறந்த பள்ளி மாணவர்களுக்கு பரிசு வழங்குவதை அஹமதாபாத்தில் கடந்த சில வருடங்களாக நடத்தி வருகின்றோம். இனிமேல் நம்மை ஆசிர்வதிக்க இவர் நம்மிடையே இல்லை . இருப்பினும் இவருடைய மனித நேயமும் உற்சாகமும் புதிய முயற்சி அல்லது கண்டுபிடிப்புகளை உருவாக்கும் மக்களிடையே ஒரு தாக்கத்தை உருவாக்கி முன்னேற்ற பாதைக்கு இட்டு செல்லும் என்று மனப்பூர்வமாக நம்புகிறோம்.

பேராசிரியர் அனில் குப்தா
இந்திய மேலாண்மை நிறுவனம்
அஹமதாபாத் – 380015
Email – anilgb@gmail.com

## வெள்ளாங்கோவில் ஜோதிமணியின் சத்துணவுக்கஞ்சி



ஈரோடு மாவட்டம் வெள்ளாங்கோவில் திருமதி. ஜோதிமணி (59) 10 ம் வகுப்பு வரை படித்து விட்டு சத்துணவு மாவு தயாரித்து விநியோகித்து வருகிறார். இவருடன் வறுமை ஒழிப்பு மகளிர் குழுவிலுள்ள திருமதி . மாலதி (வயது 41) உடன் சேர்ந்து இதனை ஒரு தொழிலாக செய்து வருகின்றனர். இவர் 10 வது வகுப்பு வரை படித்துள்ளார். இவர் கடந்த 2 வருடங்களாக சத்துணவு மாவு தயாரித்து விநியோகம் செய்து வருகிறார். இதனை கஞ்சியாகக் காய்ச்சி குடித்து வருவதால் குழந்தைகளுக்கு நல்ல ஊட்ட சத்தும், அல்சர் உள்ளவர்களுக்கு ஆரோக்கியம் தரும் உணவாகும்.

**சத்துணவு தயாரித்தல்**

ராகி (2 கிலோ), கம்பு (2 கிலோ), தினை (1 கிலோ), சோளம் (2 கிலோ) , மக்காசோளம் (2 கிலோ), கோதுமை 1 கிலோ, உளுந்து (முழு உளுந்து 1/2 கிலோ), கொள்ளு (1/2 கிலோ),பச்சப்பயறு (1/2 கிலோ), சோயா (1 கிலோ), பொட்டுகடலை (1 கிலோ), நிலக்கடலை (1/2 கிலோ), சவ்வரிசி (1/4 கிலோ) , பார்லி (1/4 கிலோ), சாராபருப்பு (50 கிராம்), கசகசா (25 கிராம்), ஓமம் (25 கிராம்), அவுல் (1/2 கிலோ), ஜாதிக்காய் (2), மாசிக்காய் (2), சுக்கு (100 கிராம்), ஏலக்காய் (50 கிராம்), சாமை (1 கிலோ), முந்திரி, பாதாம்பருப்பு (50 கிராம்), எள்ளு (வெள்ளை எள் 100 கிராம் ) சேர்த்து அரைத்து மாவாக்க வேண்டும். ராகி, சோளம், கம்பு, பச்சைப்பயிறு, கொள்ளு ஆகியவற்றை தனித்தனியாக 8 மணி நேரம் ஊற வைத்து பின் முளை கட்டி 2 நாட்கள் காய வைத்து அரைத்து வைத்து கொள்ள வேண்டும். இதனுடன் பனங்கருப்பட்டி சேர்த்து தேவையான மாவு கொண்டு கூழாக்கி சாப்பிடலாம்.

இவ்வாறு கூழ்சாப்பிட்டு வந்தால் உடம்பில் கொலஸ்ட்ரால் குறையும். கொழுப்பு குறையும். சர்க்கரைசத்துள்ளவர்களுக்கு இந்த கஞ்சி உகந்தது. மேற்கண்ட 22 பொருட்கள் கொண்டு தயாரித்தால் சுமார் 16 கிலோ மாவு கிடைக்கும். இதனை கிலோ ரூ. 200க்கு விநியோகித்து வருகிறார். மாதம் ஒரு முறை சத்துணவு தயாரித்து வருகின்றனர்.

திருமதி. ஏ. ஜோதிமணி,
க/பெ. அர்த்தநாரி
4/125, அண்ணாவீதி ,
வறுமை ஒழிப்பு சங்கம்
வெள்ளாங்கோவில் ,
கோபி செட்டி பாளையம் வட்டம்
ஈரோடு மாவட்டம்
செல் – 9976694789
திருமதி. மாலதி செல்: 8973594727

தொகுப்பு : பவித்திரா , இந்துமதி

## இந்திராகாந்தியின் "நவகவ்யா" மற்றும் வேளாண்மை சேவை



திருமதி. எஸ். இந்திராகாந்தி (வயது 43) 8 வது வரை படித்து விட்டு அம்பா சமுத்திரம் அருகே சிங்கம்பட்டியில் வசித்து வருகிறார். இவர் தனது கணவர் திரு. சட்டநாதனுடன் சேர்ந்து 5 ஏக்கர் நிலத்தில் பூச்செடிகள், காய்கறி, நெல் சாகுபடி செய்து வருகிறார். இவர் டான்வா மூலம் பயிற்சி பெற்று பல சாதனைகளை படைத்துள்ளார். இந்திராகாந்தி 1995 ல் டான்வா திட்டம் மூலம் வேளாண்மையில் பல பயிற்சிகளில் கலந்து கொண்டு வந்துள்ளார்.

**நவகவ்யா தயாரித்தல்**

நவகவ்யாவை கீழ்கண்டவாறு தயார் செய்து பயிர்களுக்கு போசாக்கு உரமாகத் தெளித்து வருகிறார். பால் (1லிட்டர்), தயிர் (1லிட்டர்),நெய் (300மி.லி ), கோமியம் (5 லிட்டர்), சாணம் (1 கிலோ), வாழைப்பழம் (5), கரும்புச்சாறு (1 லிட்டர்) , இளநீர் (1 லிட்டர்) பத நீர் (1 லிட்டர், பதநீருக்குபதில் பனங்கருப்பட்டி சேர்த்து கொள்ளலாம்). இதில் ஈஸ்டு 25 கிராம் சேர்ப்பதால் புழுக்கள் பஞ்சகவ்யாவில் வராது. இந்த 9 பொருட்களை சேர்த்து 25 நாட்கள் ஊற வைத்தால் 8 லிட்டர் ஆக குறைந்து விடும். இதனை "நவகவ்யா" என்று பெயர் சூட்டி விற்பனை செய்கிறது. 2 லிட்டர் பாட்டிலுக்கு ரூ. 200 விலைக்கு விற்கிறார். 10 லிட்டர் நீருக்கு 200 மி.லி வீதம் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும். நெல்லுக்கு மட்டும் 2 தடவை தெளித்தால் போதும் (நட்ட 25, 45 நாட்களில்) . பிற பயிருக்கு 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து வரலாம். நவகவ்யா தெளிப்பதால் 5 மூடை நெல் அதிகம் கிடைப்பதாகக் கூறுகிறார்.

**வேம்புக்கரைசல்**

வேம்புக்கரைசல் தயாரிக்க கோமியம் (10 லிட்டர்) , மஞ்சள்தூள் (1/2 கிலோ), திருநீறு (1/2 கிலோ), வேப்பம் பிண்ணாக்கு (2 கிலோ) சேர்த்து 2 நாட்கள் ஊற வைக்க வேண்டும். இது 8 லிட்டர் அளவு குறைந்து விடும். இதனை மிளகாய், பூச்செடிகளில் காணப்படும் அசுவினி போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் நீரில் 200 மி.லி கரைசலை கலந்து தெளிக்கலாம்.

**விளைச்சலைக் கூட்டுதல்**

சல்அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலையம் மூலம் கோ ஆர்.ஹச் 3 என்ற நெல்லை விதைத்து 1 ஏக்கரில் நடவு செய்தனர். ஏக்கருக்கு 4500 கிலோ விளைச்சலைத்தான் இதுவரை பல்கலைகழகத்தின் மூலம் பதிவு செய்திருந்தனர். திருமதி. இந்திராகாந்தி ஏக்கருக்கு 4895 கிலோ மகசூல் பெற்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரிடம் ரூ. 10,000 பரிசு தொகையை 2013 ல் பெற்றுள்ளார்.

**மோடி பரிசு பெறுதல்**

பாரதப்பிரதமர் 2013ல் குஜராத்தில் முதல் அமைச்சராக இருந்த போது அவரிடம் தேசிய விருதும் ரூ. 51,000 ரொக்கப்பரிசும் பெற்றுள்ளார்.

**நபார்டு உழவர் மன்றங்கள் துவங்குதல்**

நபார்டுடன் சேர்ந்து 30 உழவர் மன்றங்களைத் துவக்கி 500 உறுப்பினர்கள் சேர்த்துள்ளார். அம்பாசமுத்திரம் யூனியனில் உள்ள 5 பஞ்சாயித்துகளில் ஆரம்பித்து சந்தா தொகை ரூ. 100 ம் சேவைக்கட்டணம் ரூ. 10 ம் மாதம் தோறும் வசூல் செய்து வருகிறார். 5 பேர் கொண்ட கூட்டு பொறுப்பு குழு. ஏற்பாடு செய்து உறுப்பினர்களுக்கு நபார்டு கடன் வாங்கி வழங்கி வருகிறார். ஒரு குழு ஆரம்பித்தால் இந்திராகாந்திக்கு ஊக்கத்தொகையாக ரூ. 2000 வழங்கப்படும். இந்திராகாந்திக்கு நபார்டு உழவர் மன்ற கூட்டமைப்பின் மூலம் உழவியல் கருவி மையம் துவங்க ரூ. 25 லட்சம் நிதி உதவி பெற ஏற்பாடு செய்து வருகிறார். இதில் ரூ. 10 லட்சம் மானியத் தொகையாக கிடைக்கும். விதை, இடுபொருட்களை, மதிப்பு கூட்டப்பட்ட பண்டங்களை விற்பனை செய்ய சம்பந்தப்பட்ட விவசாயத்துறை இலாக்காக்களிலிருந்து விற்பனை உரிமம் சான்றிதழ் பெற்றுள்ளார்.

அம்மா கறவை மாடுகள் திட்டம் மூலம் பால் பண்ணை அமைக்கவும் இராமையன்பட்டி ஆராய்ச்சி மையம் மூலம் தாது உப்பு விநியோகத்திட்டம் என அனைத்து அரசு உதவி திட்டங்களையும் பயன்படுத்தி மக்கள் சேவை ஆற்றி வருகிறார்.

திருமதி. எஸ். இந்திராகாந்தி
க/பெ. சட்ட நாதன்
2/162 , வடக்கு தெரு, அயன்சிங்கம்பட்டி
ஜமீன் சிங்கம்பட்டி அஞ்சல், கல்லிடைக்குறிச்சி (வழி),
அம்பாசமுத்திரம் தாலுகா
திருநெல்வேலி மாவட்டம்–627416, செல்– 7598551972

## ஊனமுற்றோருக்கான பெட்ரோலில் இயங்கும் மூன்று சக்கர வண்டி



மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா எர்ரம்பட்டி எனும் கிராமத்தில் திரு. சின்னதுறை (60) வசித்து வருகிறார். இவர் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். திரு. சின்ன துறைக்கு பிறவியிலேயே இரண்டு கால்களும் ஊனமாகவே இருந்தது . இவர் சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் ஒரு சைக்கிள் கடையில் வேலை பார்த்து வந்துள்ளார். அப்பொழுது தமிழ்நாடு அரசு இலவசமாக கொடுத்த மூன்று சக்கர வண்டியானது கையாலாயே இயங்குவதாக இருந்தது. இதனை ஊனமுற்றோர்கள் இயங்குவது மிகச் சிரமமாக இருப்பதைக் கண்ட இவர் சுயமாகவே எரிபொருளால் இயங்கும் 3 சக்கர வாகனத்தை உருவாக்கினார்.

எரிபொருள் 3 சக்கர வாகனத்தின் முக்கிய பாகங்கள்: சைக்கிள் ரிக்சா டயர்– 3 , ஆட்டோ ஸ்பிட்டர்– 1 , இஞ்சின் சக்கரம்– 1 , பெட்ரோல் டேங்க் – 2 லிட்டர் கொள்ளளவு.

**வண்டி இயங்கும் விதம்**

சுவிட்சை ஆன் செய்து விட்டு ஆட்டோ ஸ்டாட்டர் மூலம் ஸ்டாட் செய்யவும். பின்னர் இருசக்கர வாகனமான சக்கரம் பைப் இதில் பொருத்தப்பட்டுள்ளது. வண்டி இயங்குகிறது.

**வண்டியின் சிறப்பு அம்சங்கள்**

இந்த வண்டியில் 1 லிட்டர் பெட்ரோல் போட்டால் 1 வாரத்திற்கு இயக்கலாம். கையால் இயக்கினால் உடம்பு வலி, கை, கால் வலி ஏற்படுகிறது. இந்த வண்டியில் குடி தண்ணீர் பாட்டில், உணவு, தானியங்கள் வைக்கும் பகுதியும் பொருத்தப்பட்டுள்ளது. பெட்ரோலில் இயங்குவதால் அதிக தூரம் சென்று வரலாம்.

இந்த வண்டி செய்ய ரூ.25,000 வரை செலவு செய்துள்ளார். இந்த வண்டியில் இன்னும் சில உபகரணங்களை பொருத்தினால் அதாவது வண்டியின் மேற்புரத்தில் மழை, வெயில் பாதுகாப்பிற்காக தார்பாய் போய் கொண்டு மூடவும், வண்டியில் எளிதாக ஏறி இறங்குவதற்கும் வசதி செய்ய நிதி உதவி செய்தால் மேற்க்கண்ட அனைத்து குறைபாடுகளையும் சரி செய்யலாம் எனக் கூறினார். இவருக்கு இன்னமும் பல வண்டிகள் ஊனமுற்றோருக்கு செய்து கொடுக்க மிக ஆர்வமாக உள்ளார்.

திரு. சின்னத்துறை
த/பெ. சுப்பையா நாடார்
நாடார் தெரு, எர்ரம்பட்டி அஞ்சல்
வாடிப்பட்டி தாலுகா,மதுரை மாவட்டம் – 625 501
செல் : 9159215988

## ராஜசேகரின் மூலிகை பூச்சி விரட்டி

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா, சோழவந்தானில் திரு.ராஜசேகர் (68) வசித்து வருகிறார். இவர் 12 ம் வகுப்பு வரை படித்து விட்டு இராணுவத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றி விட்டு கடந்த 30 வருடங்களாக கனரா வங்கியில் கிளார்க் வேலை செய்து ஓய்வு பெற்றவர். இவருக்கு சொந்தமாக 3 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் வாழை உளுந்து, துவரை, எள், சோளம் மற்றும் காய்கறிகள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவரது இயற்கை வேளாண்மை குறிப்புகள் பின்வருமாறு:

**மூலிகை பூச்சி விரட்டி**

தேவையான பொருட்கள்: பிரண்டை – 1 கிலோ, சாணம்– 1 கிலோ, சோற்று கற்றாழை – 1 கிலோ, கோமியம்– 1 லிட்டர், இஞ்சி சாறு – 1/2 லிட்டர், பூண்டு சாறு– 1/2 லிட்டர், மிளகாய் வத்தல் – 200 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து 48 மணி நேரம் ஊற வைத்து வடிகட்டவும். இதனை 100 லிட்டர் தண்ணீரில் 1 லிட்டர் கரைசல் சேர்த்து தெளிக்கலாம். இக்கரைசலை உளுந்து, கீரை மற்றும் காய்கறி வகைகளுக்கு தெளிக்கலாம். இக்கரைசலை தெளிப்பதால் இலை சுருட்டு புழு, அசுவினி பூச்சிகள் கட்டுப்படும்.

**வாழை கரும்புகளுக்கு மூலிகை பூச்சி விரட்டி**

வேப்பிலை – 1/2 கிலோ, புங்கன் இலை – 1/2 கிலோ, எருக்கு இலை – 1/2 கிலோ, ஊமத்தை இலை – 1/2 கிலோ, மாட்டு கோமியம் – 2 லிட்டர், சாணக்கரைசல் –

2 லிட்டர், பூண்டு சாறு – 1/2 லிட்டர் , இஞ்சி சாறு – 1/2 லிட்டர். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து 48 மணி நேரம் ஊற வைத்து வடிகட்டவும். பின்னர் 10 லிட்டர் தண்ணீரில் 1 லிட்டர் கரைசல் சேர்த்து தெளிக்கலாம்.

## சித்திக்கின் எடை அளக்கும் கருவி



மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா அய்யூர் எனும் கிராமத்தில் அபுபக்கர் சித்திக் (17) வசித்து வருகிறார். இவர் மதுரை பிரிட்டோ பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு படித்து வருகிறார். இவருடைய தந்தை அம்சத் இப்ராஹிம் ஆட்டோ டிரைவராக உள்ளார். அபுபக்கர் சித்திக்கின் உடன் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்மார்கள் , ஒருவர் சையது அபுதாகிர் மற்றும் சையது சுல்தான் அலாவுதீன் . வசதி இல்லாத குடும்பம் என்பதால் பள்ளி விடுமுறை நாட்களில் தனது அண்ணனுடன் மதுரையிலுள்ள எலக்ட்ரிகல் கடையில் வேலை பார்த்துக் கொண்டே படித்து வருகிறார்.

**கருவி உருவான விதம்**

இவருக்கு சிறு வயது முதலே அறிவியல் பாடம் மீது அளவில்லாத ஆர்வமாக இருந்துள்ளதால் ஏதாவது புதிய கண்டுபிடிப்பு செய்தாக வேண்டும். என்ற எண்ணம் இருந்தது. இதனை தனது ஆசிரியை செல்வராணியிடம் கூறியவுடன் அபுபக்கர் சித்திக்கு ஆர்வமும் ஊக்கமும் கொடுத்தார். ஒரு முறை தனது நண்பர்களோடு கிணற்றில் குளிக்கும் போது தனக்கு நீச்சல் தெரியாது என்பதால் பழைய ஆட்டோ டயர் டியூபை எடுத்து காற்று அடித்து தண்ணீரில் போட்டு நீந்தி குளித்துள்ளார். பின்னர் ஆட்டோ டயர் டியூபில் முள் குத்தி தண்ணீர் வெளியேறுவதை கவனித்துள்ளார். பின்னர் டியூபின் ஒரு பக்கமாக அழுத்திப் பார்த்தில் ஒரு பக்கமாக தண்ணீர் டியூபின் வழியாக வெளியேறுவதைக் கவனித்துள்ளார். டியூபின் ஒரு பக்கமாக அழுத்தும் போது அந்த விசை எல்லா பக்கங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும் என்ற ‘‘பாஸ்கல் விதி’’ யை பயன்படுத்தியுள்ளார்.

கருவியின் முக்கிய பாகங்கள்: பழைய ஆட்டோ டயர் டியூப், இஞ்ச்டேப், குளுகோஸ் , டியூப் , சாயம் கலந்த தண்ணீர்.

கருவியின் செயல்பாடு :



முதலில் சாயம் கலக்கப்பட்ட சாதாரண தண்ணீர் பழைய ஆட்டோ டயர் டியூபின் வழியாக நிரப்ப வேண்டும். பின்னர் டியூப்பின் மவுத்தோடு குளுகோஸ் டியூப்பை இணைக்க வேண்டும்.அதன் பின்னர் நீளமான மரப்பலகையின் மீது இன்ச் டேப்பை பொருத்தவும். அந்த இன்ச் டேப்போடு குளுகோஸ் டியூப்பையும் சமமாக இணைக்கவும். தண்ணீர் அளவை முதல் பூஜ்யம் அளவில் இருக்குமாறு வைத்துக் கொள்ளவும்.

நமது உடல் எடையை அறிய வேண்டுமென்றால் ஆட்டோ டயர் டியூபின் மீது ஏறி நின்றால் தமது எடைக்கான தண்ணீர் குளுகோஸ் டியூப் வழியாக வெளியேறும். இஞ்ச் டேப்பின் மூலம் எத்தனை இஞ்ச் அளவு தண்ணீர் வெளியேறி நிற்கிறதோ அதாவது தண்ணீர் 40 இஞ்ச் பக்கமாக நமது எடை நின்றால் 40 கிலோ என்று தீர்மானிக்க முடியும். அதாவது 1 இஞ்ச் அளவை 1 கிலோ எடையாகக் கணக்கிடலாம்.

**கருவியின் பயன்பாடு**

இந்த கருவியின் மூலம் 50 கிலோ எடையுள்ள எந்த பொருளையும் எடை கணக்கிடலாம். கேஸ் சிலிண்டர் எடையை அறியலாம். அரிசி, நெல் மற்றும் இதர தானிய மூட்டைகளின் எடைகளை அறியலாம். இந்த கருவியில் பயன்படுத்தப்படும் எல்லா பொருட்களும் பயன்படாத பொருட்களாதலால் அனைவருக்கும் எளிதில் பயன் பெறும் வகையில் இருப்பதாலும் மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறை சார்பில் 2009 ஆம் ஆண்டு இன்ஸ்பயர் விருதுக்கான மாவட்ட அளவிலான போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றுள்ளார்.

2010 ல் மாநில அளவிலும் 2011 ல் தேசிய அளவிலும் பரிசு பெற்றுள்ளார். 2013ல் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜியுடன் சந்திக்கும் வாய்ப்பை மத்திய அறிவியல் தொழில் நுட்பத்துறை இவருக்கு வழங்கி கௌரவித்தது. இவர் கடந்த மாதம் 9 முதல் 16 ம் தேதி வரை எட்டு நாட்கள் இளையோர் அறிவியல் பரிமாற்றத் திட்டம் (சகுரா) இயக்கத்தின் மூலமாக ஜப்பான் சென்று வந்துள்ளார். இந்த வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர்கள் அய்யூர் அரசு பள்ளி ஆசிரியை தலைமை ஆசிரியர் அருள் முருகன் மற்றும் பிரிட்டோ பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. அமல்ராஜ் ஆகியோராவர். எதிர் காலத்தில் தான் ஒரு மிகச் சிறந்த அறிவியல் விஞ்ஞானியாக ஆவதே எனது லட்சியம் என உறுதியாகக் கூறுகிறார்.

ஏ.அபுபக்கர் சித்திக்
த/பெ. அம்சத் இப்ராஹிம்
பள்ளி வாசல் நடுத் தெரு
அய்யூர் (அஞ்சல்),வாடிப்பட்டி (தாலுகா)
மதுரை மாவட்டம் – 625 501
செல் – 7871197284

## வலையபட்டி ஜெயமணியின் வைத்யம்



மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா ரெங்கசாமிபட்டி அருகே உள்ள வலையபட்டி கிராமத்தில் திருமதி. ஜெயமணி (40) வசித்து வருகிறார். இவர் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் விவசாய கூலி வேலையும் ஆங்காங்கே உள்ள மூலிகை செடிகளை வனப்பகுதியில் எடுத்து அப்பகுதியிலுள்ள மக்களுக்கு கொடுத்து வருகிறார். இவரது கணவர் திரு.வெள்ளைச்சாமி 2 வெள்ளாடுகள் பராமரித்து வருகிறார். இவரது தாத்தா திரு. கந்தசாமிடயிருந்து மூலிகை வைத்தியத்தை கற்று கொண்டார். இவர் கொல்லங் கோவை செடிகளை தனது வீட்டில் நட்டு பராமரித்து வருகிறார். இவர் விஷ செடி மற்றும் தோல் அலர்ஜியான சொறி சிரங்குக்கும் மூலிகை வைத்தியமும் கால்நடைகளுக்கு மூலிகை வைத்தியம் பார்த்து வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்திய முறைகள் பின்வருமாறு.

**மடிநோய்க்கு**

எருக்கம் பாலுடன் விளக்கெண்ணெய் சேர்த்து வயிறு மற்றும் மடிப் பகுதியில் தடவ வேண்டும்.

**மசாலா உருண்டை தயார் செய்தல்**

தேவையான பொருட்கள்: கொல்லங் கோவை கிழங்கு (50 கிராம்), கோவைத்தழை – ஒரு கைப்பிடி, பிரண்டை இலை ஒரு கைப்பிடி, குப்பைமேனி– ஒரு கைப்பிடி, கடுகு – 10 கிராம், சீரகம் – 20 கிராம், மஞ்சள் பொடி– 30 கிராம். மேற்க்கண்ட எல்லாம் சேர்த்து அரைத்து எலுமிச்சம்பழம் அளவு உருண்டை செய்து மஞ்சள் பொடியில் சேர்த்து உருட்டவும். மாடுகளுக்கு இந்த உருண்டை கொடுப்பதால் வயிறு சம்பந்தப்பட்ட எல்லா நோய்களும் அரணைகடி நோய்களும் குணமாகும்.

திருமதி. வி. ஜெயமணி
க/பெ. வெள்ளைச்சாமி
வலையபட்டி , ரெங்கசாமிபட்டி (வழி)
உசிலம்பட்டி (தாலுகா)
மதுரை மாவட்டம்
செல் – 9751733050

## காளியம்மாளின் கால்நடை வைத்யம்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா ரெங்கசாமிபட்டி கிராமத்தில் திருமதி. காளியம்மாள் (40) வசித்து வருகிறார். இவர் 3 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 2 ஏக்கர் நிலம் மற்றும் 2 கறவை மாடுகளை பராமரித்து வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவம் பின்வருமாறு:

**மடி நோய்க்கு மூலிகை மருந்து**

கோவைக்காய் இலை ஒரு கைப்பிடி அளவு எடுத்து சின்ன வெங்காயம் 5–6 எண்ணம் சேர்த்து அரைத்து பசை போல் செய்து மடியில் பூச வேண்டும். பூசிய பின்னர் எலுமிச்சம்பழம் 5 எண்ணம் எடுத்து இரண்டாக வெட்டி மாட்டிற்கு உள்ளே கொடுக்கலாம். பின்னர் அரை மணி நேரம் கழித்து பச்ச தண்ணீர் கொண்டு மாட்டின் மடி மீது தெளிக்கவும். இதனால் இரத்தமாக வரும் பால் மற்றும் திரி திரியாக வருவது கசடுகள் போன்றவை வெளியே வந்து விடும்.

திருமதி. காளியம்மாள்
க/பெ. சின்னத்துரை
ரெங்கசாமிபட்டி (அஞ்சல்)
உசிலம்பட்டி (தாலுகா), மதுரை மாவட்டம்

## ஊடு பயிர் மூலம் பூச்சி கட்டுப்பாடு

திருவண்ணாமலை மாவட்டம் பட்டி எனும் கிராமத்தில் திரு. காசிவேல் (37) வசித்து வருகிறார். இவர் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 4 ஏக்கர் நிலம் உள்ளது. இவரது அப்பா லாரி டிரைவராக பெங்களூரில் சில வருடம் வேலை செய்துள்ளார். இதனால் அவரது மகன் காசிவேல் முழுமையாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார். திருவண்ணாமலை பகுதியில் தண்ணீர் மற்றும் வறட்சி அதிகமாக இருப்பதால் சொட்டு நீர் பாசனமுறையை தேர்ந்தெடுத்தால் கோவைக்காய் பயிரிடும் பந்தல் முறையை முதலில் உருவாக்கினார். கோவைக்காயில் பழ பூச்சி, தாக்குதல் அதிகமாகி முட்டைகளை இட்டு கண்ட இவர் பழம் உருவாவதை தடுக்கிறது. இஞ்சி, பூண்டு, கரைசலைத் தெளித்துள்ளார். இதனால் பழ பூச்சி தாக்குதல் குறைந்துள்ளது. பின்னர் கோவைக்காய்க்கு ஊடு பயிராக உளுந்து மற்றும் மிளகாய் செடிகளை பயிரிட்டு பார்த்தில் பழ பூச்சி முழுமையாக கட்டுபடுவதை கண்டார். கோவைக்காய் செடியை 1–2 அடி இடையில் பந்தல் முறையில் செய்து மகசூல் பெற்று வருகிறார். கோவைச் செடியிலுள்ள மஞ்சள் நிற பூக்கள் மிகவும் கவர்ச்சி கரமாக இருப்பதால் புழு பூச்சிகள் கோவைச் செடியில் முட்டை இடாது. இந்த முறையை பயன்படுத்திய இவர் 1.75 லட்சம் ரூபாய் 1 ஏக்கரில் வருமானம் பெற்று வருகிறார்.

திரு. காசிவேல்
பட்டி கிராமம்
காளன்பாடி (அஞ்சல்)
திருவண்ணாமலை மாவட்டம் – 606611
செல் – 9626441066

## கந்தர்வ கோட்டை கலியபெருமாளின் இயற்கை வேளாண்மை



புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டையில் திரு. கலியபெருமாள் (50) வசித்து வருகிறார். இவர் டிப்ளமோ சிவில் இஞ்சினியரிங் படிப்பு முடித்து அரசுத் துறையில் 1984 ல் பணிபுரிந்தார். அப்போது அவருக்கு ஒரு நாளைக்கு ரூ. 23 வருமானம் கிடைத்ததால் குடும்பத்தை பராமரிக்க இயலாமையால் வேளை விட்டு விட்டு விவசாயம் செய்ய முற்பட்டார். இவருக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் நிலக்கடலை, நெல் மற்றும் காய்கறிகள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் தானே ஒரு பலசரக்கு கடை வைத்து இவர் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளையும் விற்று வருகிறார். இவர் இயற்கை விஞ்ஞானி கோ. நம்மாழ்வரின் இயற்கை வேளாண்மையை அவர் தூண்டுதலின் காரணமாக முழுமையாக இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இவர் பயன்படுத்தி வரும் சில இயற்கை விவசாய உத்திகள் பின்வருமாறு

**ஜீவாமிர்தம் :** தேவையான பொருட்கள்: மாட்டு சாணம் – 10 கிலோ, கோமியம் – 10 லிட்டர், வெல்லம் – 2 கிலோ, பயறு வகை – 2 கிலோ . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து 200 லிட்டர் கொள்ளளவுள்ள பிளாஸ்டிக் டிரம்மில் ஊர வைக்கவும். பின்னர் ஒரு கைப்பிடி அளவு மண் நிலத்திலிருந்து எடுத்து போடவும். பின்னர் 200 லிட்டர் தண்ணீர் சேர்த்து காலை மற்றும் மாலையில் கிளரவும் இப்படியாக 7 நாட்கள் கிளரவும்.

**கன ஜீவாமிர்தம்**

உலர்ந்த மாட்டு சாணத்தை எடுத்து ஜீவாமிர்த கரைசலில் போட்டு உலர வைத்து சணல் பையில் போட்டு கட்டவும். இதனை எடுத்து பயிர்களுக்கு அடிப்பாகத்தில் தூவ வேண்டும்.

**பஞ்சகவ்யம்**

தேவையான பொருட்கள்: மாட்டு சாணம் – 10 கிலோ, கோமியம் – 3 லிட்டர், தயிர் – 2 லிட்டர், பால் – 2 லிட்டர், கடலை பிண்ணாக்கு – 1 கிலோ. பஞ்சகவ்யம் தயாரிப்பதற்கு ஒரு நாளைக்கு முன்னர் கடலை பிண்ணாக்கை ஊற வைக்க வேண்டும். அடுத்த நாளில் மாட்டு சாணத்தை போடவும். பின்னர் பஞ்சகவ்ய கரைசலை வலப்புறம் மற்றும் இடப்புறமாக10 நிமிடங்கள் ஒரு குச்சியின் உதவியால் சுழற்ற வேண்டும். இப்படியாக 21 நாளைக்கு செய்யவும். பருத்தி துணியை வைத்து பிளாஸ்டிக் ட்ரமை மூடவும். இதனால் வெளி பூச்சிகள் வந்து இதில் முட்டைகளை இடாது.

இந்த கரைசல் 3 லிட்டர் கரைசலுடன் கலவையை கலந்து 15–20 நாள் இடைவெளியில் பயிர்களுக்கு தெளிக்கலாம். இந்த செயல் முறை விளக்கத்தை காந்தி கிராமம் பல்கலைக்கழக மாணவிகளுக்கு காக்கிவாடன்பட்டியில் செயல்முறை செய்து காண்பிக்கப்பட்டது.

திரு.கலியபெருமாள் : செல்: 9543970407

## ஈரோடு சுப்பிரமணியத்தின் வேகமாக இயங்கும் இரு சக்கர வாகன என்ஜின்



ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் திரு. சுப்பிரமணி (44) வசித்து வருகிறார். இவர் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் தற்போது திருப்பூர் மாவட்டம் நத்தக் கடையூர் ஈ.பி.ஈ.டி கல்லூரியில் வேலை பார்த்து வருகிறார். தற்போது இவர் நடைமுறையில் உள்ள இரு சக்கர வாகன எஞ்சினை விட அதிக வேகமாக இயங்கும் வகையில் புதிய என்ஜினை வடிவமைத்துள்ளார். பொதுவாக மோட்டார் பைக் என்ஜின் ஒரு நிமிடத்துக்கு அதிகபட்சமாக 8000 சுற்றுகள் (ஆர்.பி.எம்) இயங்கும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. இந்த என்ஜின்களில் பெட்ரோல் காற்று கலவையை இழுப்பதற்கு ஒரு வால்வும் புகை வெளியேறுவதற்கு ஒரு வால்வும் உள்ளன.

என்ஜினின் அதிகபட்ச வேகமான 8000 ஆர்.பி.எம் வேகத்தில் தொடர்ந்து இயக்கப்பட்டால் வால்வுகளில் அதிர்வு ஏற்பட்டு விரைவில் பழுதடைந்து விடும். இதனால் தற்போது அனைவராலும் பயன்படுத்தப்படும் 100 சி.சி மோட்டார் பைக் என்ஜின் பிக் அப் குறைவாகவே உள்ளது. என்ஜினில் சிலிண்டரின் உயரம், விட்டம் ஆகியவற்றின் அளவை பொறுத்து ஆர்.பி.எம். ஐ கூட்டவோ குறைக்கவோ முடியும். ஆனால் வால்வுகள் தொடர்ந்து வேகமாக திறந்து மூட இயலாது என்பதால் ஆர்.பி.எம் கூடுதலாக உள்ள என்ஜின்கள் இது வரை தயாரிக்கப்படவில்லை.

**15 ஆயிரம் ஆர்.பி.எம்**

தற்போது இந்த குறையை நிவர்த்தி செய்யும் வகையில் சுப்பிரமணியன் பெட்ரோல் காற்று கலவையை என்ஜினுள் இழுப்பதற்கும் புகையை வெளியேற்றுவதற்கும் எளிமையான தொழில் நுட்பத்துடன் தற்போதைய என்ஜின் இயக்கத்தின் அடிப்படையை மாற்றாமல் புதிய முறையை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் இஞ்சினை அதிகபட்சமாக 15 ஆயிரம் ஆர்.பி.எம் வரை இயங்கும்.

**இன்ஜினின் சிறப்பு அம்சம்**

இந்த இஞ்ஜினை பயன்படுத்துவதால் அதிகமான புகை எரிவாயு வெளியேறுவதை தடுக்கலாம். இதில் இஞ்சின் சிலிண்டர், பிஸ்டன், சாப்ட் போன்றவை இருப்பதால் சுமார் 15,000 ஆர்.பி.எம் வரை சுற்ற உதவுகிறது. வண்டியில் இஞ்சின் அதிர்வு ஏற்படுவதைத் தடுக்கலாம். இந்த புதிய இஞ்சினை ஆட்டோ, அனைத்து நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் மின்சார கப்பல்களிலும் பொறுத்தலாம்.

திரு. டி. சுப்பிரமணியன், த/பெ. கே.துரைசாமி
14 மெயின் ரோடு,
எம்.அனுமன்பள்ளி, ஈரோடு மாவட்டம் – 638 101,
செல் : 9842833887

## தனலட்சுமி பொறியியல் கல்லூரியில் அடித்தள கண்டுபிடிப்புகள் கண்காட்சி



சென்னை தாம்பரம் அருகேயுள்ள தனலட்சுமி பொறியியல் கல்லூரியில் மாணவர்கள், அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் உருவாக்கிய கண்டுபிடிப்புகள் கண்காட்சி செப்டம்பர் மாதம் 3–5 தேதிகளில் நடைபெற்றது. இந்த கண்காட்சியில் 134 மாணவர்களின் கண்டுபிடிப்புகளும் 10 அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளும் இடம் பெற்றன. இதில் பரிசு பெற்ற முதல் 3 நபர்கள் சீனாவுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக இக்கல்லூரியின் சேர்மன் இராமமூர்த்தி கூறினர். அடித்தளகண்டுப்பிடிப்பாளர்கள்

சங்கத்திலிருந்து கீழ்கண்ட கண்டுபிடிப்பாளர்கள் கலந்து கொண்டு செயல் விளக்கம் செய்து காட்டினர். பரிசு பெற்றவர்கள் விவரம் :

மாணவர்களுக்கான முதல் பரிசாக சுலேகா , 8 ம் வகுப்பு மாணவி , ஆசாத் மெட்ரிக் மேல்நிலைபள்ளி , மயிலாடுதுறை, ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரி 3 மாணவர்களுக்கும் கிடைத்தது. அடித்தள கண்டுபிடிப்பாளர்களில் முதல் பரிசு ஆந்திராவை சேர்ந்த கண்டுபிடிப்பாளர் பார்வையற்றோர்க்கு கேரம் போர்டு விளையாடுவதற்கு கண்ணில் அணியும் கண்ணாடிக்கும் இரண்டாவது பரிசு திரு.பானுமூர்த்தி, ஆட்டேமெட்டிக் கோர்வைத் தறிக்காகவும் (ரூ. 15,000), ஆறுதல் பரிசு கோயம்புத்தூர், திரு.வெங்கட்டின் தென்னை மரம் ஏறும் கருவிக்கும் (ரூ.5,000) ,அரூர், திரு. குமாரின், களையெடுக்கும் கருவிக்கும் ( ரூ. 5,000) , கம்பம் ஜாபர் அலியின் பட்டு சேலை உலர் சலவை செய்யும் கருவிக்கும் (ரூ.5,000) கிடைத்தன.

3 மாதங்கள் கழித்து நடைபெற உள்ள அடித்தள கண்டுபிடிப்புகள் கண்காட்சியில் கலந்து கொள்ள அணுக வேண்டிய முகவரி: பேராசிரியர் இராம்மூர்த்தி
விவரங்களுக்கு தனலட்சுமி பொறியியல் கல்லூரி
மணிமங்கலம் , தாம்பரம் , சென்னை–601 301
தொலைபேசி – 044–71700800
தொகுப்பு : வி. அழகுமலை , சேவா

## மகேந்திரன்,வடிவேலுவின் விவசாய கருவிகள்

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வடிவேலு (36) திரு. மகேந்திரன் (36) ராசிபாளையத்தில் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு சொந்தமாக 2 ஏக்கர் நிலம் உள்ளது. இவர்கள் இருவரும் சேர்ந்து களையெடுக்கும் மற்றும் விதைக்கும் கருவி உருவாக்கியுள்ளனர்.

**களை எடுக்கும் கருவி**



கருவியின் முக்கிய பாகங்கள்: சைக்கிள் டயர் – 1, கஸ்ட் – 1, கொழு– 1,நீள வாக்கில் உள்ளது. கைபிடி – 1 . இக்கருவியில் எந்த வித மின்சாரம் மற்றும் எரிபொருள் பயன்படுத்தப்படவில்லை. வெறும் கையாலே தள்ளி களைகளை வெட்டலாம். இந்தக் கருவியைக் கொண்டு நெல்களை எடுப்பு தவிர மற்ற எல்லா பயிர்களையும் வெட்டலாம். களைச்செடி 3–4 அடி இடைவெளியில் இருந்தால் களை வெட்டுவது கடினம் அதே போல 1–5 2 அடி இடை வெளியில் விளையும் பயிர்களான பருத்தி, சோளம், களைகளை எளிதாக வெட்டலாம். ஈரப்பதம் நிறைந்த 1 நிலங்களில் களைகளை பறிப்பது மிகவும் சிரமம்.

**விதை விதைக்கும் கருவி**



முக்கிய பாகங்கள் : சைக்கிள் டயர் வீல் – 2, சைக்கிள் செயின் – 1 ரோலர் – 1, சிறிய சர்க்கரம் – 1, கைப்பிடி – 1, விதைபோடும் குழாய் பைப் – 1. வரிசை நடவு செய்யும் பயிர்களை நிலக்கடலை, மக்காச்சோளம் மற்றும் பயிர் வகைகள் அனைத்துக்கும் இந்த கருவியை பயன்படுத்தலாம். கருவியை நகர்த்தி முதலில் விதையை விதை போடும் குழாயின் வழியாக போடும் போது விதை பைப்பின் வழியாக வந்து செயின் சுத்தும் இடத்திற்கு வந்து ஒவ்வொன்றாக விதை விழுகிறது. ஒரு நேரத்தில் இக்கருவியில் 1.5 கிலோ விதைகளை விதைக்கலாம். விதைப்பு ஆழம் 5 செ.மீ வரை பதிகிறது. விதைப்பின் இடைவெளி 0.50 அடி இருக்க வேண்டும்.

வேலையாட்கள் அதிகம் தேவையில்லை ஒரு நபரே போதுமானது. குறைவான நேரத்திலே விதைக்கலாம். கருவியை இயக்குவது எளிது. இக்கருவியில் ஒரு நேரத்தில் 1/2 கிலோ – 1 கிலோ வரை விதைக்கலாம். இக்கருவியின் விலை ரூ. 5,000 ஆகும். தற்பொழுது 2 கருவிகள் செய்வதற்கு ஆடர் பெற்றுள்ளார்.

## டிராக்டர் மூலம் செக்கு எண்ணெய் ஆட்டுதல்



டிராக்டர் மூலம் மர செக்கை இயக்க வைத்து எண்ணெய் எடுக்கிறார். சுமார் 11/2 மணி நேரத்தில் 25 கிலோ எண்ணெய் கிடைக்கிறது. இதற்கு 1 லிட்டர் டீசல் மட்டும் செலவாகிறது.

திரு. வடிவேல் மற்றும் மகேந்திரன்
த/பெ. முத்துசாமி
1/252, குத்தாங்கல் மேடு
ராசிபாளையம் ,
மோகனூர் அஞ்சல், நாமக்கல் மாவட்டம்
செல் – 9442955622

## கந்தசாமியின் கால்நடை வைத்யம்

### ஆட்டிற்கு வயிறு உப்பிசத்திற்கு

தேவையான பொருட்கள்: சதாவரி கிழங்கு – 2 எண்ணம், மஞ்சள் பொடி – 10 கிராம், உப்பு – 10 கிராம். மேற்க்கண்ட அனைத்தையும் சேர்த்து அரைத்து ஆட்டிற்கு கொடுக்க வேண்டும்.

### தீனி எடுக்காமலிருந்தால்

தேவையான பொருட்கள்: அகத்தி இலை, மூங்கில் இலை, பிரண்டை, ஆகாச கருடன் கிழங்கு , உப்பு தேவையான அளவு .மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து ஆடு மாடுகளுக்கு கொடுக்கலாம்.

திரு. கந்தசாமி
த/பெ. ராமசாமி
புதுப்பட்டி, ராசிபுரம் தாலுகா
நாமக்கல் மாவட்டம்
செல் : 9865554101

## சுப்பிரமணியனின் புதிய வார காலண்டர்

| செப்டம்பர் | | மன்மத வருடம் | | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| | | ஆவணி 15 | 16 | ஆவணி 17 | 18 | 19 |
| | | திதி | | | | |
| | | நாட்சத்திரம் | | | | |
| | | உதயம் | | | | |
| | | சூரிய உதயம் | | | | |

ஈரோடு மாவட்டம் சென்னிமலையை அடுத்த முத்தையன் கோவில் பகுதியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் (வயது 36) 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் சென்னிமலை சென்கோப் டெக்ஸ்சில் தறிதொழிலாளியாக வேலை பார்க்கிறார். இவர் வார அடிப்படையில் புதிய காலண்டரை உருவாக்கியுள்ளார். தற்போது தினசரி மாத காலண்டர் மட்டும் நடை முறையில் உள்ளது. இவர் புதியதாக உருவாக்கி உள்ள வாரக்காலண்டர் வாரத்தில் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை முதல் சனிக்கிழமை வரை 7 நாட்களுக்கு ஒரு நாள் என்ற அடிப்படையில் மொத்தம் 53 தாள்களை கொண்டுள்ள படி புதிய காலண்டரை அறிமுகபடுத்தியுள்ளார். புதிதாக உருவாக்கிய காலண்டரை 1000 அச்சடித்து தனது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுத்து வருகிறார். இவர் வடிவமைத்துள்ள காலண்டரில் தமிழ் மற்றும் முஸ்லீம் மாதங்களும் வழக்கமாக தினக் காலண்டர்களில் இருக்கும் அனைத்து தகவல்களும் இருக்கின்றன. சூரிய உதயம், நல்லநேரம், திதி, நட்சத்திரம், ராசிபலன்களும் குறிக்கப்பட்டு இருக்கின்றன. வாரக்காலண்டரை 2006 ம் ஆண்டிலிருந்து துவக்கி விநியோகித்து வருகிறார். இந்த கண்டுபிடிப்பு மட்டுமின்றி ஏற்கனவே பல கண்டுபிடிப்புகளுக்காக ஜனாதிபதி விருதும் பெற்றிருக்கிறார். சுப்பிரமணியம் ஏற்கனவே மோட்டார் சைக்கிளுக்கான இரண்டு ஸ்டரோக என்ஜினை கண்டுபிடித்து 2005 ஜனவரியில் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமிடம் இருந்து மத்திய அரசின் புதிய கண்டுபிடிப்புக்கான தேசிய விருதைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. டி. சுப்பிரமணியன்
த/பெ. கே.துரைசாமி
14 மெயின் ரோடு
எம்.அனுமன்பள்ளி,
ஈரோடு மாவட்டம் – 638 101
செல் : 9842833887

## பாண்டியம்மாளின் கால்நடை வைத்யம்



மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் தென்பழஞ்சி கிராமத்தில் திருமதி. பாண்டியம்மாள் (60) வசித்து வருகிறார். இவர் பள்ளிக் கூடம் சென்றதில்லை. இவருக்குச் சொந்தமாக 3 ஏக்கர் நிலம் மற்றும் கறவை மாடு 4 , வெள்ளாடு 6 ம் வைத்து பராமரித்து வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள் பின்வருவன:

**கால்நடை கழிச்சலுக்கு**

தேவையான பொருட்கள்: வீலி இலை – 1/2 கிலோ, சின்ன சீரகம் – 50 கிராம், சின்ன வெங்காயம் – 50 கிராம், புளிச்ச தண்ணீர் – 500 மி.லி

செயல்முறை: மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைக்கவும். மாட்டிற்கு 300 மி.லியும் ஆட்டிற்கு 150 மி.லியும் 2 வேளை வீதம் கொடுக்கலாம்.

திருமதி. பாண்டியம்மாள்
க/பெ. பழனிச்சாமி
தென்பழஞ்சி (அஞ்சல்), திருப்பரங்குன்றம் (தாலுகா),
மதுரை (மாவட்டம்) – 625 021

## ராசகோபாலன்பட்டி ராமரின் கால்நடை மூலிகை வைத்தியம்



தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், ராசகோபாலன்பட்டி கிராமத்தில் திரு.ராமர் (65) வசித்து வருகிறார். இவர் 2ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 3 பெண் குழந்தைகளும் 1 ஆண் குழந்தையும் உள்ளனர். இவர் கடந்த 47 வருடங்களாக கால்நடைகளுக்கு மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவருடைய குடும்பத்தில் கடந்த 3 தலைமுறைகளாகவும் மூலிகை வைத்தியம் செய்து வரப்படுகிறது. இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள் பின் வருவன:

**மாடு கழிச்சலுக்கு**

தேவையான பொருட்கள்: கொல்லங்கோவைக் கிழங்கு – 100 கிராம், வேலிப்பருத்தி – ஒரு கைப்பிடி, வீலிஇலை – ஒரு கைப்பிடி, நில வாகை – ஒரு கைப்பிடி, வெள்ளருகு– ஒரு கைப்பிடி. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 300 மில்லி வீதம் 2 வேளை கொடுக்கலாம்.

**தீனி திண்ணாமைக்கு**

உப்பு – ஒரு கைப்பிடி, புளி – 50 கிராம், வெத்தலை – 5 எண்ணம், வேலிப்பருத்தி – ஒரு கைப்பிடி, நிலவாகை– ஒரு கைப்பிடி, மிளகு – 50 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 200 மி.லி வீதம் 2 வேளை கொடுக்கலாம்.

**விஷக்கடி அரனைகடிக்கு**

தேவையான பொருட்கள்: விராலி இலை – ஒரு கைப்பிடி, மூங்கில் இலை – ஒரு கைப்பிடி, வெள்ளருகு– ஒரு கைப்பிடி, நில வாகை – ஒரு கைப்பிடி, வலம்புரிக்காய் – 25 கிராம், வெத்தலை – 5 எண்ணம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசும் பாலில் கலந்து மாட்டிற்கு 200 மி.லியும், ஆடுகளுக்கு 100 மி.லியும் கொடுக்கலாம்.

**கால்நடை தோல் நோய்களுக்கு**

தேவையான பொருட்கள்: கொல்லங் கோவைக் கிழங்கு – 100 கிராம், மிளகு – 10 கிராம், வெத்தலை – 5 எண்ணம், வெள்ளருகு – ஒரு கைப்பிடி. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து 300 மி.லி அளவு 2 வேளை வீதம் 3 நாளைக்கு கொடுத்தால் சரியாகிவிடும்.

**வயிறு உப்பிசத்திற்கு**

தேவையான பொருட்கள்: நிலவாகை இலை, வேலிப்பருத்தி இலை, சிறுதும்பை இலை, வெத்தலை, மிளகு, சுக்கு. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 300 மி.லியும், ஆட்டிற்கு 100 மி.லியும் கொடுக்கலாம்.

**மாடு இளங்கொடி போடாமலிருந்தால்**

தேவையான பொருட்கள்: எலுமிச்சம் பழம் – 5 எண்ணம், நாமக்கட்டி – 10 கிராம், புத்துமண் – ஒரு கைப்பிடி. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து 2 வேளை கொடுக்கம்.

**காய்ச்சலுக்கு**

தேவையான பொருட்கள்: காப்புகட்டு இலை – ஒரு கைப்பிடி, நில வேம்பு – ஒரு கைப்பிடி, வேலிப்பருத்தி – ஒரு கைப்பிடி, குப்பைமேனி – ஒரு கைப்பிடி, வெத்தலை – 5 எண்ணம் மிளகு – 10 கிராம், சுக்கு – 10 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு300 மி.லி வீதம் 3 வேளை கொடுக்கவும்.

**மாட்டிற்கு கண்ணில் பூ விழுந்தால்**

தேவையான பொருட்கள்: மிளகு– 10 கிராம், சீனாக்காரம் – 10 கிராம், வெத்தலை – 5 எண்ணம், சுக்கு – 10 கிராம்.

மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 3 சொட்டு வீதம் 2 வேளை கொடுக்கலாம்.

**புழு வைத்த புண்ணிற்கு**

தேவையான பொருட்கள்: வெள்ளருகு இலை – ஒரு கைப்பிடி, வேலிப்பருத்தி இலை – ஒரு கைப்பிடி, நிலவாகை இலை – ஒரு கைப்பிடி , பழம்பாசி இலை – ஒரு கைப்பிடி, கீழாநெல்லி இலை – ஒரு கைப்பிடி, வெத்தலை – 5 எண்ணம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 300 மி.லி வீதம் உள்ளே கொடுக்க வேண்டும். எலுமிச்சம்பழம் – 2 எண்ணம், மருதாணி இலை – ஒரு கைப்பிடி, நாமகட்டி – 10 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசை போல் செய்து புண்ணில் போடவும். இந்த மாதிரி ஒரு வாரம் தொடர்ந்து போடவும்.

**மாட்டுக்கு தொக்கம்**

தேவையான பொருட்கள்: வீலி இலை –ஒரு கைப்பிடி, பழம்பாசி இலை ஒரு கைப்பிடி, குப்பை மேனி இலை , கொல்லல் கோவைக் கிழங்கு 100 கிராம், புத்துமன் – ஒரு கைப்பிடி–. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 500 மி.லி வீதம் 2 வேளை கொடுத்தால் மாட்டின் வயிற்றில் உள்ள பேப்பர், ஆனி, மற்றும் செரிமானம் ஆகாத பொருட்கள் வெளியே வந்து விடும்.

**கால்நடைகளுக்கு மூலிகை மசாலா உருண்டை**

கால்நடைகளுக்கு முக்கியமாக கழிச்சல், வயிறு உப்பிசம், சினை பிடிக்காமை போன்ற நோய்களுக்கு மூலிகை மசாலா உருண்டை செய்து கடந்த 47 வருடமாக தயார் செய்து விற்பனை செய்து வருகிறார். இவர் ஆரம்பத்தில் ஒரு உருண்டையின் விலை ஒரு அணாவிலிருந்து தற்பொழுது ரூ. 10 க்கு விற்பனை செய்து வருகிறார்.

மூலிகை உருண்டை தயார் செய்யும் முறை : தேவையான பொருட்கள் : பழம்பாசி இலை – ஒரு கைப்பிடி , காப்புகட்டு இலை – ஒரு கைப்பிடி, வீலி இலை – ஒரு கைப்பிடி, வெத்தலை – 10 எண்ணம், கொல்லங்கோவைக் கிழங்கு – 150 கிராம். மஞ்சள் பொடி – 150 கிராம், மஞ்சள் பொடி – 150 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து உருண்டை செய்து மஞ்சள் பொடியில் சேர்த்து உருட்டி எடுக்கவும். இதனை காலையில் 1 உருண்டை வீதம் மாதத்திற்கு ஒரு முறை செய்து கொடுத்தால் ஆடு மாடுகளுக்கு நோய் நிவாரணம் கிடைக்கும்.

வைத்யர் முகவரி:
திரு. ராமர்
த/பெ. பெரிய கோவிந்தன்
இராசகோபாலன்பட்டி காலனி ,
மடம் அருகில்,
ஆண்டிபட்டி தாலுகா, தேனி மாவட்டம்

## பனையம்மாளின் கறி சுண்டக்காய்



மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா இச்சிகுளம் கிராமத்தில் திருமதி. பனையம்மாள் (65) வசித்து வருகிறார். இவர் பள்ளிக் கூடம் போனதில்லை இவருக்கு 3 ஆண் 3 பெண் குழந்தைகள் உள்ளனர். இவருக்கு சொந்தமாக 2 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் மாமரம் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் 4 வருடங்களக்கு முன்னால் பாலமேடு காய்கறி மார்கெட்டிலிருந்து 1 கிலோ கறி சுண்டக்காய் வாங்கி விதை எடுத்து தனது தோட்டத்தில் பயிரிட்டு வளர்த்து வருகிறார்.

**பராமரிப்பு முறை**

தற்பொழுது 7 செடி வைத்து பராமரித்து வருகிறார். ஒரு செடிக்கு 3 கிலோ வரை காய் காய்க்கிறது. மாதத்திற்கொரு முறை ஆட்டு சாணம் 1 செடிக்கு 1/2 கிலோ வரை உரமாக இடுகிறார். நான்கு நாளைக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். இவர் தற்பொழுது 1 கிலோ ரூ. 30க்கு விற்பனை செய்து வருகிறார்.

**கறி சுண்டக்காயின் சிறப்புகள்**

சாதாரண சுண்டக்காய் கசப்பு தன்மையுடையது. ஆனால் கறி சுண்டக்காய்க்கு கசப்பு தன்மை இல்லை. சீக்கிரம் உரிய நேரத்தில் சமைத்துவிடலாம். எளிதில் வெந்து விடும். இதனை பருப்பு சாம்பாரில் போட்டு சாப்பிடலாம்.

திருமதி. பனையம்மாள்
க/பெ. வெள்ளை
66, மேட்டுபட்டி, இச்சிகுளம் (வழி)
வாடிப்பட்டி (தாலுகா), மதுரை மாவட்டம்

## தொங்கும்பந்தல் வேளாண்மை

திராட்சை பாகற்காய், புடலங்காய், பீர்க்கங்காய் போன்ற கொடிவகைப் பயிர்களை தமிழகத்திலேயே முதன் முறையாக தொங்குப் பந்தல் என்ற புதுமையான முறையில் வெற்றிகரமாக சாகுபடி செய்து வருகிறார். திருவண்ணாமலை மாவட்டம் நடுப்பட்டு கிராமத்தைச்

சேர்ந்த அய்யனார் அவரிடம் பேசியபோது:

எனக்கு சொந்தமா 4 ஏக்கர் நிலம் இருக்கு. அதுல கடந்த 20 வருஷ்மா நெல், கரும்பு பயிர் செய்து வந்தேன். சில வருஷத்துக்கு முன்னாடி 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம் வந்ததால விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டதாலயும், போதிய வருமானம் கிடைக்கததாலயும் நெல் சாகுபடியை நிறுத்திட்டு கடந்த 7 வருஷமா தோட்டப்பயிர்களான பப்பாளி, பாகற்காய், பீர்க்கங்காய், புடலங்காய் சாகுபடியில் இறங்கிட்டேன் எங்க மண் செம்மண் வகையை சார்ந்தது என்பதால் கொடிவகை பயிர்களுக்கு செட்டாகி நல்லா வளர ஆரம்பிச்சிடுச்சி. கொடிவகைப் பயிர்கள் வளையும் தன்மை கொண்டது என்பதால் கொடியை தாங்க இடையிடையே கம்பு நட்டு அதுமேலத்தான் ஏத்திவிட முடியும். 1 ஏக்கருக்கு கொடியை தாங்குற மூங்கில் கம்புகள் 350 வரை தேவைப்படும். இந்த கம்புகள் இல்லை என்றால் வராமல் கொடிகள் மண்ணுக்கு மேல் படர்ந்திடும். பயிர் வளர்ச்சிக்கு முக்கியமான இந்தக் கம்புகளை வச்சி நடுவதால் அறுவடைக்குப் பிறகு 2 வருஷத்துக்கு உழவு ஓட்ட முடியாது. நெல் கரும்பு, வாழை போன்ற வேறப் பயிர்களையும் சாகுபடி பண்ண முடியாது. அது மட்டு மில்லாமல் நிலத்தை உழவு ஓட்ட முடியாததால களைச் செடிங்கள் அதிகமாகும் மூங்கில் கம்புகளின் விலையும் அதிகம். ஒரு கம்பு 40 ரூபாய்க்கு விக்கறாங்க இரண்டு வருஷம் வரைக்கும் தான் இந்த கம்புகள் தாங்கும். அதன் பிறகு மக்கிப் போய்விடுவதால் 2 வருஷத்துகொருமுறை கம்புகளுக்காகவே ஆயிரக்கணக்கில் செலவு பண்ண வேண்டிய சூழ்நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுறாங்க.

ஒவ்வொருத் தடவையும் கம்புகளுக்காகவே அதிக தொகையை செலவிட்டதால் பயிர்களுக்காக நான் போட்ட முதலீட்டை எடுக்க முடியாமல் ரொம்பவே நஷ்டமடைஞ்சுட்டேன். இப்படிப்பட்ட இக்காட்டான நிலையில் தான் கொடிவகைப் பயிர்களுக்கு கம்புக்கு பதிலாக பந்தல் டைப்ல ஏதாவது அமைச்சா நல்லாயிருக்கும் பொறுப்புணர்ச்சியோடு செலவை கட்டுப்படுத்த யோசிக்க ஆரம்பிச்சேன். தீவிரமா யோசிச்சதோடின் விளைவாக 2010 ம் ஆண்டுல இருந்து 2012 ம் ஆண்டு வரைக்கும் தொங்கும் பந்தல் அமைக்கறதுக்கான வழி முறைகளையும் எப்படி செயல்படுத்தலாம் என்ற ஒத்திகையும் வெல்டிங் செய்பவர்களுடன் கலந்தாலோசித்து பந்தல் அமைக்க தேவையான பொருட்களை வாங்கத் துவங்கினேன். வலுவாக கொடிகளை தாங்கிப் பிடிக்கற மாதிரி கொடிகளை ஏற்றிப் பிடிக்கற மாதிரியும் பண்ணனும்னு முடிவுப்பண்ணி வேலையாட்கள், வெல்டிங் செய்பவர்களுடன் சேர்ந்து வெற்றிகரமா தொங்குப் பந்தலை அமைத்தேன். நிலத்தைச் சுற்றி நாலாபுறமும் 16 இரும்புக் கம்புகளை நட்டு நிலத்தின் நடுப்பகுதியில் 15 கிலோ எடையும், 40 அடி உயரமும் கொண்ட பெரிய இரும்புக் கம்பியை மண்ணுக்குள் ஆழமாக நட்டு அதனுடன் ராடையும் பொருத்தினோம். நடுவுல இருக்கிற இரும்புக் கம்பியோட நிலத்தை சுத்தி நட்டிருக்குள் 16 கம்பிகளையும் இணைக்க இரும்பிலே ஆன ஒயரையும் சேர்த்துக் கட்டினோம். கொடி வளர வளர அதோட கீழ்ப்பகுதியில் இருந்து மேலே இரும்பு ஒயர்களை ராடு மூலம் ஏற்றவும். இறக்கவும் மாதிரி வடிவமைச்சி சிறப்பா பயிரிட ஆரம்பிச்சேன். கடந்த 1 வருஷமா தொங்குப்பந்தல் முறையில் தான் கொடிவகைகளை பயிரிட்டுக்கிட்டு வாறேன். தொங்குப் பந்தல் அமைக்க ஒன்னரை லட்சம் செவாச்சு. செலவு தான் கொஞ்சம் கூட ஆனா வாழ்நாள் முழுக்க இந்த முறையிலேயே கம்புக்கு செலவு பண்ணாமல் சாகுபடி செய்யறதுதான் இதோட முக்கியமான சிறப்பு முதல் முயற்சி தோல்வியடைஞ் சிடுமோன்னு மனசுல சின்ன பயம் இருந்தாலும் செஞ்சு பார்த்துடுவோமேங்கற நம்பிக்கை மலையளவு இருந்துச்சு. அந்த நம்பிக்கைத்தான் என்னோட முதல் முயற்சியையே வெற்றிப் பெற வச்சிருக்கு. முயற்சி செய்யறது எப்பவுமே வீண்போகாது என்று கொடியில் தொங்கும் பாகற்காயை பறித்தப்படியே தன்னம்பிக்கை வார்த்தை உதிர்க்கிறார் அய்யனார்.

**தொங்கும் பந்தல் முறையின் சிறப்புகள்**

ஒரே நேரத்தில் கொடிவகை சாகுபடியின் போதே நெல், உளுந்து, வேர்க்கடலை போன்ற எல்லா வகைப் பயிர்களையும் பயிரிட்டு இரட்டை லாபம் பெறலாம். ஒரு முறை மட்டுமே செலவு செய்து வாழ்நாள் முழுக்க லாபம் அடையலாம். அறுவடைக்குப் பிறகு நிலத்தை உழுது கொள்ளலாம். இரும்புக் கம்பியில் ராடு பொருத்தியிருப்பதால் கொடிகளின் வளர்ச்சிக்கேற்ப ஏற்றவும் இறக்கவும் முடியும். பயிர் சுழற்சி செய்யலாம். கொடிவகைப் பயிர்களை இயற்கை முறையில் செய்தால் விளைச்சல் அதிகரிக்கும். செலவு குறைவு. மேலே குறிப்பிட்ட இந்த சிறப்புகள் கம்பு வைத்து நடும் முறையில் இல்லை என்று கூறும் அய்யனாரை திருவண்ணாமலை மாவட்ட விவசாயத்துறை அதிகாரிகள் நேரில் சந்தித்து தொங்குபந்தல் முறையை அறிமுகப்படுத்தியதற்காக பாராட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(நன்றி : சர்ப்பனா, புதிய தலைமுறை இதழ்)

## நெசவுத்தொழிலில் புதுமைகள்– சுந்தரராஜனனின் சாதனைகள்



திரு. சுந்தரராஜன் (63) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து விட்டு பாரம்பரிய நெசவுத் தொழில் ஈடுபட்டு வந்தார். இவர் காஞ்சிபுரத்தில் ரெட்டிபேட்டை தெருவில் வசித்து வருகிறார். இவர் நெசவுத்தொழிலில் நிவுணத்துவம் பெற்று காஞ்சிபுரம் பட்டு புடவை நெய்பவர்களுக்கு பொருளாதார ரீதியில் நல்ல வருமானம் கிடைக்க வழி செய்துள்ளார். இதனால் இத்தொழில் நலிவடைந்து விடாமல் மீணடும் மறுமலர்ச்சி பெற்று நெசவாளர்களின் மனதில் நம்பிக்கை கொடுக்கின்றது. இவருடைய புதிய அணுகுமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**ஒடு சட்டில் மூலம் சிறுவர் தொழிலாளர் முறையை விட்டு விடுதல்**

1985 ம் ஆண்டுக்கு முன்னர் நெசவில் இழையோட சட்டிலை சுண்டு விரலால் தான் தள்ளி விடுவார்கள். இச்சமயம் கோர்வை தறியில் நெய்வதற்கு சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். சுந்தரராஜன் ஒடு சட்டிலை ஆள்காட்டி விரலால் தள்ளிவிடும் முறையில் இரண்டு நபர்களுக்குப்பதிலாக ஒரே நபர் மூலம் நெய்யும் முறை கொண்டு வரப்பட்டது. இது நெசவாளர்களின் வருமானத்தை இரட்டிப்பாகக் கூட்டியது. தற்சமயம் காஞ்சிபுரம் பகுதியில் 10,000 தறிகளுக்கு மேலே இந்த முறையைக் கடைபிடித்து நல்ல பயன் பெற்றுள்ளனர். இதற்காக சுந்தராஜன் அவர்களுக்கு 2013ல் சந்த் கபீர் விருது அளிக்கப்பட்டது.

**கோராசில்க் நெசவு**

பட்டுநூலை பிளீச்சிங் செய்யாமல் நெய்யப்படும் முறையாகும். இதனால் இரசாயன பொருட்கள் மிச்சப்படும் அல்லது செலவு குறையும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பங்கம் வராது. நெசவு அடர்த்தி குறைவதால் நெசவு நெய்யும் மீட்டர் அதிகரிக்கும். மாதத்திற்கு 3 சேலை நெய்பவர்கள் 4 சேலையாகக் கூட்டி நெய்யலாம். இந்த சேலைகள் கோடை காலத்தில் உடுத்துவதற்கு உகந்தது. இதனை நடுத்தர, உயர்தர வகுப்பினர் விரும்பி உடுப்பர்.

**திரைத்துணி நெய்தல்**

வீட்டு வாசலில் திரைத்துணியாக நெய்வதற்கு எரிசில்க் (அஸ்ஸாம்) மல்பெரிசில்க் (கர்நாடகா) இந்த இரண்டு நூல்களைக் கலந்து நெய்யப்படும். இதற்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதால் ஏற்றுமதி செய்ய உகந்தது. இதை தற்போது விசைத்தறியில் செய்யப்போவதாக திரு. சுந்தரராஜன் கூறுகிறார்.

**புதியதலைமுறை விரும்பும் புதிய பியூஸன் துணி**

தற்கால இளைஞர்கள் விரும்பும் மெல்லிய பியூஸன் துணியை மல்பெரி, டஸ்ஸார், ராஜஸ்தான்லினன் நூல் கலந்து நெய்யப்படுகிறது. மேலும் பட்டு, பருத்தி நூல் கொண்டு நெய்யப்படும் துணி (ஜீன்ஸ்) ஆடவர் மகளீர் என கால்சட்டை, மற்றும் கோட் போன்ற வடிவமைப்புகளுக்கு உகந்தது.

**எம்ப்ராய்டரியை பட்டு சேலையில் அறிமுகப்படுத்துதல்**

1996 ல் சேலைகளில் எம்ப்ராய்டரி போடுதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதை சுந்தரராஜ் அவர்கள் பட்டு சேலைகளில் அறிமுகப்படுத்தி கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கியுள்ளார். சேலை, ரவிக்கைகளுக்கு எம்ப்ராயிட்ரிங் செய்ய ரூ. 2000 செலவாகும். இதை செய்து முடிக்க 4 நாட்கள் எடுத்துக் கொண்டால் ரூ.1200 கூலி கிடைக்கும். தற்சமயம் எம்ப்ராய்டிங் செய்ய சீனாவிலிருந்து மெஷின் கொண்டு வரப்பட்டு செய்யப்படுகிறது.

**சேலையில் அலங்கார கற்கள் சேர்த்தல்**

பட்டு சேலையில் ஸ்வாரங்கி கற்கள் ஆஸ்ட்ரியா நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு சேலையில் டிசைனாக அடுக்கப்படுகிறது. இதற்கு மிஷின் பயன்படத்தப்படுகிறது. ஒவ்வொரு மிஷினுக்கும் 15–20 பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. பெண்கள் மாதத்திற்கு ரூ.3000 லிருந்து ரூ.4000 வரை சம்பாதிக்கின்றனர்.

**பின்புறம் திரை அடக்கி நெய்த நெசவு**

(கூஷ) இம்முறையில் செய்யப்படும் சேலை, பாவாடைத்துணியை ஒரு பக்கம் இன்றும் மறு பக்கம் அடுத்த நாளும் உடுத்தலாம்.

### சேலையோடு சேர்த்து ரவிக்கை பட்டுத்துணி கொடுத்தல்

1983 ல் பட்டுப்புடவையுடன் ஜாக்கெட் துணி சேர்த்து அதே கலரில் செட்டாகக் கொடுத்து பட்டுச்சேலை விற்பனையை ஊக்குவித்துள்ளார். இயற்கை சாயமாக காரட் சாறு, காய்ந்த வேலம்பட்டை சாறு போன்ற நிறம் தரும் பொருட்களைப் பயன்படுத்தி துணிகளுக்கு சாயமேற்றியும் புதுமை புகுத்தியுள்ளார். பட்டு சேலைகளில் எண்ணெய்க்கரையை போக்க முதலில் சீயக்காய், சோப்புக்காய், புங்கக்காய் பயன்படுத்தி நிழலில் காய வைக்க வேண்டும்.

திரு. வி. சுந்தரராஜன்
25, ரெட்டிப்பேட்டை தெரு
காஞ்சிபுரம் – 631501
செல்– 9380964868

## பிறந்த நாளைக் கொண்டு கிழமையை தெரிந்து கொள்ள உதவும் காலண்டர்

சிலருக்கு பிறந்த நாள் தெரியும். ஆனால் கிழமை தெரியாது என்று கூறுவர். பிறந்த நாளை வைத்துக் கொண்டு மிக எளிதில் எந்த கிழமையில் பிறந்தவர்கள் என்பதைக் கண்டறியும் அட்டவணையை திரு. ஜனார்த்தணன் உருவாக்கியுள்ளார். இதை வைத்து 33 012 ஆண்டுகள் வரை தெரிந்து கொள்ளலாம். பிறந்த கிழமையைத் தெரிந்து கொள்வது நல்லது. ஏனெனில் சனி, செவ்வாயில் பிறந்தவர்கள் பிரச்சனைகள் உண்டுபன்னும் பிரிவைச் சார்ந்தவர்கள். வெள்ளிக்கிழமையில் பிறந்தவர்கள் சமாதானப்புறா; வியாழக் கிழமை பகலில் பிறந்தவர்கள் புகழுடன் இருப்பார்கள். புதன் கிழமையில் பிறந்தவர்கள் செல்வாக்குடன் இருப்பார்கள். திங்கள் கிழமை பிறந்தவர்கள் சந்திரன் அம்சமாக சிறப்புடன் இருப்பார்கள். ஞாயிற்று கிழமை பிறந்தவர்கள் சுறுசுறுப்பாக இருப்பார்கள்.

திரு. ஜனார்த்தணன், ஆசிரியர் (ஓய்வு)
152, ஏ விவேகானந்த தெரு
விநாயகபுரம்
குடியாத்தம் தாலுகா
வேலூர் மாவட்டம் – 635603
செல் – 8903989445

## ஐயப்பனின் நாட்டு மாடு பராமரிப்பு



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுகா கோட்டிக்குப்பம் கிராமத்தில் திரு. ஐயப்பன் (45) குடும்பத்தில் பல தலை முறைகளாக நாட்டு மாடுகள் பராமரிக்கப்படுகின்றன. இவருக்கு 1 கானி நிலம் உள்ளது. இதில் மல்லாட்டம் (நிலக்கடலை), கம்பு, நெல் சாகுபடி செய்கிறார். இவரிடம் 8 பசுக்கள், 2 காளை, 4 கன்று குட்டிகள், 2 உழவு மாடுகள் மொத்தம் 16 மாடுகள் உள்ளன. இந்த மாடுகளை இவரும் இவர் மனைவி சுதா, 2 பையன்களும் பராமரித்து வருகின்றனர்.

### மாடு மேய்த்தல்

கோட்டிக்குப்பம் கிராமத்தில் சுமார் 100 குடும்பங்களுக்கு மேல் நாட்டு மாடுகள் வளர்த்து வருகின்றனர். இவ்வூரில் சுமார் 2000 மாடுகளுக்கு மேல் நாட்டு மாடுகள் உள்ளன. மாடுகளை சுமார் 2 கி.மீ தூரத்திலுள்ள கழுவெளி (புறம்போக்கு) நிலத்திற்கு ஓட்டிச் செல்லப்பட்டு மேய்க்கிறார்கள். இப்பகுதி சுமார் 1000 ஏக்கர் பரப்பிற்கு மேல் புறம்போக்கு நிலம் உள்ளது. கடந்த 5 வருடங்களாக இரால்பண்ணை இப்பகுதியில் துவங்கப்பட்டு மேய்ச்சல் நிலத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இரால் பண்ணையில் பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்கள் குடிநீரில் கலந்து மாசு ஏற்பட ஏதுவாகி மாடு இறக்க நேரிடுகிறது. 1000 மாடுகளுக்கு மேல் இறப்பு ஏற்பட்டது. கழுவெளி மேய்ச்சல் நிலத்தைப் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

### நாட்டுமாடுகளில் வருமானம்

இவருடைய 10 மாடுகளிலிருந்து வருடத்திற்கு 8 டிராக்டர் லோடு எரு கிடைக்கும். இதன் மதிப்பு ரூ. 6,000 ஆகும். வருடத்திற்கு 4 கிடா கன்றுகள் விற்பதன் மூலம் ரூ. 30,000 வரை பணம் கிடைக்கும். இவரிடம் ஒரு ஜோடி உழவு மாடுகள் உள்ளன. உழவு மாடுகளினால் மிக

ஆழமாக உழுகாமல் மேற்பரப்பில் உழுவதால் நிலக்கடலை நன்றாக முளைப்பு கட்டும். டிராக்டரில் உழவு செய்து நிலக்கடலை விதைத்தால் முளைப்பு திறன் குறைவு. இதனால் வருடத்தில் 2 மாதங்கள் உழவு மாடுகள் மூலம் வருமானம் ரூ. 20,000 (நாள் ஒன்றுக்கு ரூ. 350 / வீதம் 2 மாதங்கள்) வரை வருமானம் கிடைக்கும். இது தவிர ஒரு நாளைக்கு 4 பசுக்களிலிருந்து சுமார் 8 லிட்டர் பால் கிடைக்கும். இதன் விலை ரூ. 160. வருடத்திற்கு ரூ. 40,000 வரை வருமானம் கிடைக்கிறது. பராமரிப்புக்கு கடலை தீவனம், கம்பு தட்டை, நெல்வைக்கோலுக்கு ரூ. 5000 வரை செலவாகும். நிகர வருமானம் வருடத்திற்கு ரூ– 60,000 வரை கிடைக்கிறது.

திரு. ஐயப்பன்
த/பெ. விஸ்வலிங்கம்
மேட்டுத் தெரு
கோட்டிக்குப்பம் ,நடுக்குப்பம் அஞ்சல்
மரக்காணம் தாலுகா, விழுப்புரம் மாவட்டம்
செல்:8344248530

## ஆத்துப்பட்டி முருகேசனின் கால்நடை மூலிகை வைத்திய முறைகள்



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகா ஆத்துபட்டி கிராமத்தில் திரு. முருகேசன் (46) வசித்து வருகிறார். இவர் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 3 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் தென்னை, முருங்கை மற்றும் காய்கறிகள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் கால்நடை வைத்திய முறையை தனது தந்தை திரு. சின்னக் காளையிடம் கற்றுக் கொண்டார். இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள் பின்வருமாறு:

### மடி நோய்க்கு

தேவையான பொருட்கள்: கோவை இலை – ஒரு கைப்பிடி, வேப்பிலை – ஒரு கைப்பிடி, குப்பை மேனி–ஒரு கைப்பிடி, சின்ன வெங்காயம் – 50 கிராம், டால்டா – 50 கிராம், மஞ்சள் பொடி – 20 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசை போல் செய்து மாட்டின் மடியின் மீது தடவ வேண்டும். இப்படி காலை மாலை 2 வேளை வீதம் 3 நாளைக்கு செய்ய வேண்டும்.

### மாட்டிற்கு கண்ணில் பூ விழுந்தால்

முருங்கை இலை பூ எடுத்து அரைத்து சாறு எடுத்து மாட்டின் கண்ணில் 5 சொட்டு வீதம் 2 வேளை என 3 நாளைக்கு செய்யவும்.

### தோல் நோய்களுக்கு

சீமை அகத்தி இலை 1/2 கிலோ எடுத்து அரைத்து பசைபோல் செய்து பாதிக்கப்பட்ட தோலின் மீது தடவி வர கால்நடைகளுக்கு வரும் முடி உதிர்தல், அரிப்பு போன்றவை குணமாகும்.

மனிதர்களுக்கு வரும் படர்தாமரை, தேமல் போன்ற நோய்கள் 3 நாளில் முற்றிலும் குணமாகும்.

### கோழி கழிச்சலுக்கு

கோவை இலை – ஒரு கைப்பிடி, சின்ன வெங்காயம் – 1 எண்ணம், சீரகம் – 10 எண்ணம், பூண்டு – 1 எண்ணம், மஞ்சள் பொடி – 5 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் மோரில் கலந்து அரைத்து மிளகு அளவு உருண்டை செய்து கோழிகளுக்கு ஒரு வேளைக்கு 2 உருண்டை என 3 வேளை கொடுக்கவும்.

திரு. சி. முருகேசன்
த/பெ. சின்னக் காளை
டானா தோட்டம்
ஆத்துப்பட்டி அஞ்சல்,
கண்டமனூர் (வழி)
ஆண்டிபட்டி (தாலுகா)
தேனி மாவட்டம்

## புளப்பங்கடை பெரிய சாமியின் கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள்



சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் தாலுகா, புளப்பங்கடை கிராமத்தில் திரு. பெரியசாமி (55) வசித்து வருகிறார். இவர் 2 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு சொந்தமாக 2 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் மரவள்ளி மற்றும் காய்கறிகள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவருக்கு செந்தமாக 10 வெள்ளாடு, கறவை

மாடு – 1 வைத்து பராமரித்து வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள் பின்வருவன:

**கோழிகளுக்கு வரும் இரத்த கழிச்சலுக்கு**

தேவையான பொருட்கள்: நாவல்மர, தழை, மற்றும் பட்டை 50 கிராம், இலை ஒரு கைப்பிடி, மதுரம் பட்டை – 50 கிராம், சங்கு தேளபட்டை – 50 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பவுடர் செய்து தண்ணீரில் கலந்து கோழிகளுக்கு 5 மி.லி அளவு 2 வேளை கொடுக்கலாம். இக்கரைசலை ஒரு மாதம் வரை வைத்திருக்கலாம்.

**மடி நோய்க்கு**

பெருங்கொழிஞ்சி இலை – 1/2 கிலோ, உப்பு கல் – 50 கிராம், டால்டா – 50 கிராம். மேற்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டின் மடியில் 3 வேளைக்கு 3 நாள் பூச வேண்டும்.

**குந்து நோய்க்கு**

வேலிப்பருத்தி இலை 1/2 கிலோ, அரைத்து பசு மாட்டு வெண்ணெய் 100 கிராம் சேர்த்து கொடுக்கலாம்.

**ஆடு, மாடு கழிச்சலுக்கு**

சிறு தும்பை இலைச்சாறு – 300 மி.லி, சுக்கு – 50 கிராம், மிளகு – 20 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாடுகளுக்கு 300 மி.லி வீதமும், ஆடுகளுக்கு 200 மி.லி வீதமும் கொடுக்கலாம்.

திரு. ரா. பெரியசாமி
த/பெ. ராமசாமி
புளப்பங்கடை கிராமம், கருமந்துறை (அஞ்சல்)
பெத்தநாயக்கன் பாளையம் (தாலுகா)
சேலம் (மாவட்டம்)

## வெள்ளாங் கோவில் லோகேஸ்வரியின் இயற்கை வேளாண்மை



திருமதி. லோகேஸ்வரி (37) ஈரோடு மாவட்டம் வெள்ளாங்கோவில் அருகில் திருமதி. லோகேஸ்வரி (37) வசித்து வருகிறார். இவர் முக்கால் ஏக்கரில் மஞ்சளும், 1500 வாழை மரங்கள் பயிரிட்டு சாகுபடி செய்து வருகிறார். இவர் எம்.ஏ முதுகலைப் பட்டம் படித்து விட்டு கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் செயலாளராக செயல்பட்டு வருகிறார். மகளிர் குழுக்களின் மூலம் பெறப்படும் பால் உபரியாக இருப்பதால் பாலை மிதி வண்டியில் எடுத்துச் சென்று பசும்பாலை லிட்டர் விலை ரூ. 40க்கும் எருமை பாலின் விலை ரூ. 50 க்கும் விற்பனை செய்து வருகிறார்.

**மஞ்சளில் வரும் செம்பொறியான் நோய்க்கு**

வேப்பந்தழை புங்கந்தழை, பலாத் தழையை மிக்சியில் அரைத்து இத்துடன் 3 லிட்டர் நீர், சூடமோனாஸ் எனப்படும் இயற்கை நுண்ணியிரி 1 கிலோ சேர்த்து 2 நாள் ஊற வைக்கவும். இதனை 1 டேங்கிற்கு கால் லிட்டர் வீதம் ஒரு ஏக்கரில் தெளித்தால் மஞ்சளில் வரும் செம்பொறியான் எனும் நோய் கட்டுப்படும். இது ஒரு வகை பேனினால் உருவாகும் இந்த பேன் வந்தால் இலை சுருங்கி இருக்கும். இதை மாதம் ஒரு முறை தெளித்து வர வேண்டும். இதற்கு வேறு எந்த ரசாயன பூச்சி கொல்லி மருந்தும் கேட்காது.

**இயற்கை உரம் தயாரித்தல்**

மாட்டு கோமியம் 10 லிட்டர், புளித்த மோர் 2 லிட்டர் கலந்து இத்துடன் 500 லிட்டர் நீரில் சேர்த்து வைத்து கொள்ளலாம். இதனை வாழைக்கு தூரில் ஊற்றி விடலாம் அல்லது வாய்க்கால் நீரில் கலந்து விடலாம்.

திருமதி. லோகேஸ்வரி
த/பெ.நடராஜ்
கோடிபாளையக்கார் தோட்டம்
வெள்ளாங்கோவில் , கவுந்தப்பாடி (வழி)
கோபிச்செட்டி பாளையம், ஈரோடு மாவட்டம்
செல் : 9443847313

## துரைப்பாண்டியின் மூலிகை வைத்தியம்

துரைப்பாண்டி (வயது 55) இரண்டாவது வரை படித்து அம்பாசமுத்திரம் அருகே பொன்மாநகர் புதுக்காலனியில் வைத்யம் செய்து வருகிறார். இவர் கேரளாவில் திருவனந்தபுரத்திற்கு அருகே வாழ்ந்து வந்த ஒரு குருவிடம் 8 வருடங்கள் தங்கி மூலிகை, ஆன்மீக சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பழகிக் கொண்டார். பின்னர் தனது சொந்த ஊருக்கு வந்து வைத்தியம் செய்து வருகிறார். இவர் வர்மக் கலையையும் கற்றுள்ளார். அம்பாள் மூலம் இறை வாக்கு செவ்வாய் கிழமையில் கூறி வருகிறார். இவர் கடைபிடிக்கும் வைத்திய முறைகள் பின்வருமாறு:

**மூலம்**

மூலம் வந்தவர்களுக்கு கருணைக்கிழங்கு லேகியமும் நிலவாகை சூரணமும் சாப்பிடத் தரவேண்டும்.

கருணைக்கிழங்கு அவித்து உரித்து 7 கடைச்சரக்கு சாமான்கள் சேர்த்து லேகியம் தயார் செய்து தர வேண்டும். கருவாடு, நல்லெண்ணெய், மீன், சிக்கன் சேர்க்கக் கூடாது.

**மூட்டுவலி**

முடக்கத்தான் தைலம், தழுதாழை, தைலம் வெளியே பூச வேண்டும். உள்ளே தழுதாழை லேகியம் சாப்பிட வேண்டும்.

**தாதுவிருத்தி லேகியம்**

பூனைக்காலிவிதை, நிலைப்பனைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு சேர்த்து லேகியம் தயார் செய்து சாப்பிட்டு வர வேண்டும்.

திரு. துரைப்பாண்டி வைத்யர்
123 ஏ, பொன்மாநகர் புதுக்காலனி
தெற்கு கல்லிடைக் குறிச்சி அஞ்சல்
அம்பாசமுத்திரம் தாலுகா,
திருநெல்வேலி மாவட்டம்

## வண்டிப்பாளையம் சீனிவாசனின் கால்நடை வைத்யம்



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே உள்ள வண்டிப்பாளையம் கிராமத்தில் கடந்த 50 ஆண்டுகளாக மாடுகளுக்கு மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவர் பின்பற்றும் சில வைத்திய முறைகள் பின்வருமாறு .

**சினைபிடிக்காத மாடுகளுக்கு**

வேப்பெண்ணெய் 100 மி.லி, எலுமிச்சம்பழம் 2, மஞ்சள் 100 கிராம் சாதம்வடித்த தண்ணீரில் கலந்து ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் 2 நாட்கள் போட வேண்டும்.

**விஷக்கடிக்கு**

கட்டிப்பெருங்காயத்துடன் வாழைப்பழம் 4 சேர்த்து (வாழைப்பழத்தில் பெருங்காயம் திணித்து) சாப்பிடக் கொடுக்க வேண்டும். இதனை 3 ஞாயிறு தொடர்ந்து தர வேண்டும்.

**பேன்/உன்னிகளுக்கு**

தும்பைத்தழை (1/2 படி தழை), உப்பு 100 கிராம். சேர்த்து அரைத்து உடம்பு முழுவதும் பூச வேண்டும்.

**மூக்கடைப்பானுக்கு**

புகையிலை, சுக்கு, வேலிப்பருத்தி ஒவ்வொன்றும் 10 கிராம் எடுத்து அரைத்து நீர் விட்டு வெள்ளைத்துணியில் பொட்டலமாகக் கட்டி சாறு எடுத்து மூக்கிலும் , காதிலும் கண்ணிலும் சொட்டு விட வேண்டும். இது நாசி / மூக்கடைப்பானுக்கு உடனடி நிவாரணம் தரும்.

**புழு வைத்த புண்ணிற்கு**

வேப்பஎண்ணெய்–100மி.லி,மஞ்சள்தூள், எலுமிச்சம்பழம் 3 , கட்டி கற்பூரம் எடுத்துக் கொள்ள வேண்டும். முதலில் வேப்பெண்ணெயைக் காய வைத்து மஞ்சள்தூள், எலுமிச்சம்பழச்சாறு, தூள் செய்த கற்பூரம் கலந்து விட்டால் நன்கு கரைந்து விடும். இதை புண்ணிற்குப் போட வேண்டும்.

**சுண்டு வாதத்திற்கு**

வெள்ளைப்பூண்டு 10 கிராம் எடுத்து வெல்லம் 200 சேர்த்து அரைத்து வெதுவெதுப்பான வடி சாத தண்ணீரில் கலந்து (1/2 படி) உள்ளே தர வேண்டும். இதை தொடர்ந்து 3 நாட்கள் கொடுத்தால் சுண்டு வாதப்பிரச்சனை வராது.

## வாசகர் வட்டம்

### ருசியான முறுக்கு

நான் விவசாய குடும்பத்தைச் சார்ந்தவன். எனது தாய் தந்தை படிப்பறிவு இல்லாதவர்கள். நான் 10 ம் வகுப்பு வரை படித்து விட்டு பல்வேறு இடங்களில் வேலை பார்த்துள்ளேன். அதாவது பெங்களூரில் 5 வருடம் பூனாவில் 10 வருடம் என பல உணவு பதார்த்த நிறுவனங்களில் பணிபுரிந்து நல்ல அனுபவபட்டுள்ளேன். 2001 ம் ஆண்டு சென்னை வந்து நாம் புதிதாக செய்ய வேண்டும் என யோசித்து பல வகை ஆராய்ச்சி செய்து ஒரு வகையாக மரவள்ளிக்கிழங்கு பவுடரை தேர்ந் தெடுத்து அதனுடன் உளுந்தை வறுத்து மாவாக்கி மரவள்ளிக்கிழங்கு பவுடர் மற்றும் வறுத்த உளுந்து மாவு சேர்த்து முறுக்கை சுற்றி எண்ணையில் பொறித்து எடுத்து அதன் மீது புதினா பவுடரை வேக வைத்த முறுக்கு மேல் தூவி புதினா முறுக்காக தயார் செய்து மார்க்கெட்டில் விநியோகம் செய்கிறேன். இந்த புதினா முறுக்கு இருக்கிறது என்று கேட்கிற அளவிற்கு எனது தயாரிப்பு பிரபலமாகி விட்டது. அதன் பின் 2 தக்காளி ருசியில், 3 காரமுறுக்கு 4 பட்டர் என 4 வகையாக

ஒவ்வொன்றாக மார்க்கெட்டில் விற்க ஆரம்பித்து இன்று ஓரளவு வியாபாரம் நடத்து கொண்டு இருக்கிறது. எனது நோக்கமே ''மாற்றி யோசி'' சென்னையில் 350 சூப்பர் மார்க்கட்களிலும் பெங்களூர், திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளுர், ஹதராபாத் என பல ஊர்களுக்கும் அனுப்பி வருகிறேன்.

திரு. இரா. சௌந்தர்ராஜ்
1/154, குன்றத்தூர் மெயின் ரோடு
பெரியபணிச்சேரி
சென்னை – 600 0128
செல் – 09941859239
தொலைபேசி – 044–23821855

## இரயிலில் கழிப்பறை கழிவை வெளியேற்றும் தானியங்கி வால்வு

நம் நாட்டில் இரயில் நிற்கும்பொழுது பயணிகள் கழிவறையை பயன்படுத்துவதால் திடக்கழிவுகள் இரயில் நிலைய பிளாட்பாரங்களில் விழுவது இரயில்வே நிர்வாகத்துக்கு மிகப்பெரும் பிரச்சினையாக உள்ளது. நாடு முழுவதும் பல ஆயிரம் இரயில் நிலையங்களில் பயணம் செய்யும் பல லட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் இவற்றை சுத்தம் செய்வதற்கு பல ஊழியர்கள் தேவைப்படுவதுடன் ஏராளமான தண்ணீரும் தேவைப்படுகிறது.

இப்பிரச்சினையை மிக எளிதாக தீர்க்கும் வகையில் இரயில் நிற்கும்பொழுதும், குறைவான வேகத்தில் செல்லும்பொழுதும் கழிவறை குழாய் தானகவே மூடிக்கொள்ளும் வகையிலும், இரயில் மிதமான வேகத்திலும், அதிக வேகத்திலும் செல்லும் பொழுது கழிவறை குழாய் திறந்து கொள்ளும் வகையிலும் தானியங்கி முறையில் செயல்படக்கூடிய எளிய வால்வு முறையை நான் உருவாக்கியுள்ளேன். இரயில் பிளாட்பாரத்துக்கு வருவதற்கு முன்பே இந்த வால்வுகள் கழிவறை குழாயை மூடிக்கொள்ளும். இரயில் பிளாட்பாரத்தை விட்டு விலகிச்சென்ற பின் தான் வால்வுகள் கழிவறை குழாயை திறக்கும். இதனால் இரயில் நிற்கும் பொழுது பயணிகள் கழிவறையை பயன்படுத்தினாலும் திடக்கழிவுகள் பிளாட்பாரங்களில் விழாமல் தடுத்துக் கொள்ளும். இந்த வால்வானது காற்று மற்றும் புவிஈர்ப்பு விசை அடிப்படையில் செயல்படுவதால் நடைமுறைச்செலவு இல்லாமல் பயன்படுத்த முடியும். புதிய இரயில் பெட்டிகள் தயாரிப்பிலும் தற்போது பயன்பாட்டில் உள்ள இரயில் பெட்டிகளிலும் இவ்வமைப்பை பயன்படுத்தி செலவில்லாமல் பிளாட்பாரங்களில் திடக்கழிவுகள் விழாமல் தூய்மையாக வைத்துக் கொள்ள முடியும். இதனால் ஏராளமான தண்ணீரும், பல ஆயிரம் ஊழியர்களின் மனித உழைப்பும் மீதியாகும். தூய்மையான இந்தியா, சுகாதாரமான இந்தியா கொள்கைக்கு என்னுடைய புதிய கண்டுபிடிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நேரில் விளக்கமளிக்கவும் தயாராக உள்ளேன். மிகவும் பயனுள்ள என்னுடைய கண்டுபிடிப்பை ''ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் இக்னைட் 2015'' விருதுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.வாஞ்சிநாதன்
சுவாமி விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
பரஞ்சேர்வழி அஞ்சல், நல்ரோடு
காங்கயம், திருப்பூர் மாவட்டம் – 638701

## படுத்து எழுந்திருக்காத மாடுகளுக்கு

எனக்கு ஒரு சிறிய விபத்து ஏற்பட்டதால் இன்னும் சரியாக நடக்க இயலவில்லை. அதனால் பால் கறவைக்கு செல்ல முடியவில்லை. எனக்கு அடிக்கடி பல ஊர்களிலிருந்தும் தொடர்ந்து தொலைபேசி வந்து கொண்டிருக்கிறது. இதில் மாடுகளுக்கு மூலிகை வைத்தியம் பற்றி பலர் கேட்டு வருகின்றனர். சென்ற வாரத்தில் ஒருவர் திருவண்ணாமலையிலிருந்து போன் செய்திருந்தார். மாட்டுக்கு ஜொல்லு ஒழுகி வருகின்றது. அதே சமயம் தீனியும் எடுக்கவில்லை என்று சொல்லி இருந்தார். இதற்கு டாக்டரிடம் சென்று காட்டியும் குணமாகவில்லை என்று கூறி இருந்தார். இவருக்கு கீழ்க்கண்ட வைத்தியத்தை கடைபிடிக்குமாறு கூறினேன். அவரும் கடைபிடித்து பலன் கிடைத்ததை கூறி சந்தோஷம் அடைந்தார்.

வைத்திய முறை : தும்பை, துளசி, குப்பைமேனி, சங்கு இலை, பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், வெள்ளைபூடு, சுக்கு, மிளகு உரலில் இடித்து பின்னர் சுடு தண்ணீர் ஒரு டம்ளர் சேர்த்து வடி கட்டி கண்ணிலும், காதிலும், நாசியிலும் 4 சொட்டு விட வேண்டும். பின்னர் அந்த கசடை உள்ளே கொடுத்து விட வேண்டும். இம்முறையில் கீழே படுத்து எழுந்திருக்காத மாடுகளும் வெகு விரைவில் எழுந்து விடும்.

திரு. கோவிந்தன்
அயோத்தி பட்டிணம், சேலம் மாவட்டம்
செல்: 9364222098

## கால்நடை பராமரிப்போரின் மூலிகை வைத்திய அனுபவங்கள்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா டி.பெருமாள் பட்டியில் கடந்த 14.6.2015 அன்று கால்நடை மூலிகை வைத்ய பயிற்சி முகாம் நபார்டு வங்கி மூலம் நடைபெற்றது. இந்த வைத்திய முகாமில் 40க்கு மேலோன கறவை மாடு பராமரிப்பவர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். விழுப்புரம் மாவட்டம் நடுக்குப்பம் கிராமத்தில் வறுமை ஒழிப்பு சங்கம் மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு கால்நடை மூலிகை வைத்தியம் பயிற்சி எடுத்து கொண்டனர். கறவை மாடுகளுக்கு என்னென்ன நோய்கள் வருகிறது. அதனை மூலிகை கொண்டு எவ்வாறு குணப்படுத்தலாம் என்று அழகுமலை விளக்கமளித்தார். பின்னர் கால்நடைகளுக்கு மூலிகை குடற்புழு மருந்து தயாரிக்கப்பட்டு ஆடு மாடுகளுக்கு கொடுக்கப்பட்டது. இந்த வைத்திய முகாமில் கால்நடை பராமரிப்பவர்களிருந்து சில மூலிகை வைத்திய அனுபவங்கள் தொகுக்கப்பட்டன. அவை பின்வருமாறு.

**கழிச்சலுக்கு:** முருங்கப்பட்டை – 200 கிராம், பெருந்தும்பை இலை – 2 கைப்பிடி, குப்பைமேனி இலை – 2 கைப்பிடி, கொழிஞ்சி வேர்– 200 கிராம், உப்பு – 1 கைப்பிடி மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து நீர் விட்டு அரைத்து மாட்டிற்கு 300 மி.லி வீதம் 2 வேளை கொடுக்கவேண்டும்.

பாப்பாத்தி, க/பெ. பெருமாள், டி.பெருமாள்பட்டி

**மடிநோய்க்கு :** பேய் பீர்க்கு இலை – கால்கிலோ, டால்டா– 100 கிராம், எலுமிச்சம் பழம் – 5 எண்ணம், மஞ்சள் பொடி – 50 கிராம், உப்பு தண்ணீர் – தேவையான அளவு , உருளை கிழங்கு – 5 எண்ணம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசை போல் செய்து மாட்டின் மடி, காம்பு முழுவதும் பூசி விடவும். பின்னர் பச்சை உருளைக் கிழங்கை அறுத்து உள்ளே கொடுக்கவும். இப்படி 3 நாளைக்கு 2 வேளை வீதம் செய்து வந்தால் மடி நோய் குணமாகும். அன்னகாமு, க/ பெ. ராமையா, டி. பெருமாள்பட்டி

**ஆடு கழிச்சலுக்கு:** பூவரசு இலை – 2 கைப்பிடி, வெந்தயம் – 50 கிராம், சீரகம்– 50 கிராம், மோர் – 100 மி.லி மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து ஆட்டிற்கு 100 மி.லி வீதம் 3 வேளை கொடுத்தால் சரியாகும்.

**விஷகடிக்கு :** வெள்ளைப்பூண்டு– 50 கிராம், மிளகு – 50 கிராம், சீரகம்– 30 கிராம், வெங்காயம்– 50 கிராம், வெத்தலை – 5 எண்ணம், குப்பைமேனி இலை – 2 கைப்பிடி . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து வெள்ளைத் துணியில் கட்டி மாட்டின் இரு கண்ணிலும் 3 சொட்டு வீதம் 2 வேளை விடவேண்டும்.

**மாட்டு சாணம் இரத்தமாக போனால்** (இரத்தக் கழிச்சல்) தேவையானவை: விளாம்பிசின் – 2 கைப்பிடி, வெள்ளைபூண்டு – 100 கிராம், தயிர் – 200 கிராம். விளாம்பிசின் மற்றும் வெள்ளை பூண்டுடன் தயிர் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 2 வேளை கொடுக்க வேண்டும்.

**காய்ச்சலுக்கு:** துளசி இலை – 2 கைப்பிடி, வில்வஇலை – 2 கைப்பிடி, வேப்ப இலை – 2 கைப்பிடி, கடுக்காய்– 100 கிராம், மிளகு – 50 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து வெண்ணீரில் கலந்து 300 மி.லி வீதம் 3 வேளை கொடுக்க வேண்டும்.

**மாடு இளைத்தால் :** இஞ்சி – 150 கிராம், வெள்ள எருக்கம் பூ – 20 எண்ணம், மிளகு– 200 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து 1 லிட்டர் தண்ணீரில் சேர்த்து கொதிக்க வைத்து 1 லிட்டர் தண்ணீர் 1/2 லிட்டராக வத்தும் வரை காய்ச்சவும். இதனை மாட்டிற்கு 200 மி.லி வீதம் 2 வேளை கொடுக்க வேண்டும்.

**மாட்டிற்கு ரோமம் கொட்டினால் :** கடுக்காய் பவுடர் – 100 கிராம், தான்றிக்காய் – 100 கிராம், நெல்லிக்காய் – 100 கிராம், எலுமிச்சை சாறு – 300 மி.லி. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து மாட்டின் மீது 2 வேளை வீதம் 3 நாட்களுக்கு தடவவும்.

பொன்னழகு , க/பெ. குபேந்திரன், டி.பெருமாள்பட்டி

**மாடு வயிறு உப்பியிருந்தால்**

வெற்றிலை, பெருங்காயம் வறுத்து வெற்றிலை சேர்த்து வயிறுக்கு கொடுக்கவும்.

பஞ்சவர்ணம் – திருவண்ணாமலை

**மாடு சினைபிடிக்க**

ஆணை நெருஞ்சி இலை இடித்து அதன் சாறை உள்ளே கொடுக்க சினை நிக்கும்.

தமிழ் செல்வி – திருவண்ணாமலை

**மாடு காய்ச்சலுக்கு**

அம்மான்பச்சரிசி, நாயுருவிதழை, உத்தாமணிதழை, வேப்பிலை இடித்து சாற்றை உள்ளே கொடுக்க வேண்டும்.

தமிழ்ச்செல்வி – வேலூர்

**மாடு குந்து வந்தால்**

குண்டுமணிதழை, முழுதழை கால்களுக்கு கட்ட சரியாகி விடும்.

வள்ளி – திருவண்ணாமலை

**மாடு பிறப்பு உறுப்பு புண்**

பூங்கற்பூரம், வேப்பஎண்ணை இரண்டையும் ஒன்று சேர்ந்து அந்த புண்ணில் வைத்தால் பூச்சி வெளியே வரும். புண் சரியாகிவிடும். – தமிழ்ச்செல்லி – திருவண்ணாமலை

**வயிற்று வலிக்கு**

எலுமிச்சை உறுகாய் ஒரு கப் வயிற்க்கு கொடுத்தால் சரியாகி விடும். – பஞ்சவர்ணம் – திருவண்ணாமலை

**மடி வீக்கம்**

எலுமிச்சை சாறு, சாக்பீஸ் அரைத்து பத்து போட்டால் குணமாகும். – பஞ்சவர்ணம்

**மடிபுண், மடிகாம்பு சீழ்வடிதல், ரத்தம் பாலுடன் கலந்து வந்தால்**

படிகாரம், காய்ந்த மிளகாய், உப்பு, காரசெடி முள் , எலுமிச்சை செடி முள், கிச்சளி செடி முள் ஒன்று சேர்த்து மடி சுத்தி போட சரியாகி விடும். – தமிழ்ச்செல்வி – திருவண்ணாமலை

**மாடுவை கொசு கடித்தால்**

உடம்பில் மஞ்சள் தேய்த்து விட்டால் கொசு வராது

**சினை நிற்க**

தேங்காய் பிஞ்சு, கொய்யா பிஞ்சு, சின்ன வெங்காயம் 100 கிராம், செம்மண் இவற்றை அரைத்து வயிற்றுக்கு கொடுத்தால் சினை நிற்க்கும்.

– லெட்சுமி – திருப்பத்தூர்

**கால் புண் குணமாக**

கடுக்காகொட்டை, மஞ்சள்தூள், இரண்டையும் அரைத்து தேங்காய் எண்ணெயில், கலந்து போட்டால் கால் புண் குணமாகும். – நிர்மலா– திருப்பத்தூர்

**மாட்டின் பேதி நிற்க**

முழு துவரையை வேக வைத்து வயிற்றுக்கு கொடுக்க சரியாகி விடும். மாட்டுக்கு புண் வந்து விட்டால் கற்பூரம்– 25 கிராம், மஞ்சள் தூள் – 25 கிராம், தேன் மிளகு கொஞ்சம் எல்லாவற்றையும் காய்ச்சி புண் உள்ள இடத்தில் தடவினால் புண்கள் குணமாகும். சாராதா – கடலூர்

**மாட்டுக்கு சினை பிடிக்க**

ஒரு முட்டை , சீயக்காய் இரண்டையும் அரைத்து மாட்டுக்கு கொடுத்து அதன் பிறகு சினை ஊசி போட வேண்டும். புவனேஷ்வரி – கடலூர்

மாட்டு வயிறு உப்புதலுக்கு வடகம், பெருங்காயம், வெல்லம் மூன்றும் கலந்து கொடுத்தால் வயிறு வீக்கம் குறையும்.

பி. வள்ளி

மடி வீக்கத்துக்கு சாக்பீஸ் (சுண்ணாம்புகட்டி), எலுமிச்சை சாறு கலந்து தடவ வேண்டும்.

புவனேஸ்வரி

மாட்டுக்கு செரிமானம் ஆகவில்லை என்றால் இஞ்சியை அரைத்து மாட்டுக்கு கொடுக்க வேண்டும்.

சரிதா–கடலூர்

மாட்டுக் சாணத்துடன் இரத்தம் கலந்து வந்தால் குண்டுமணி இலையை அரைத்து புளிச்ச தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

புவனேஸ்வரி

பால் அதிகரிக்க மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, கோதுமை சோளம் அரைத்து குடிநீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

வள்ளி– திருவண்ணாமலை

(பெங்களூரில் கால்நடை மருத்துவக் கல்லூரி பால் பண்ணையில் மாடுகளுக்கு கீழ்க்கண்ட வீதத்தில் கொடுக்கப்படுகிறது: கோதுமை தவிடு –46%, மக்காச்சோளம்–50%, கடலை பிண்ணாக்கு–1%, சோயாபீன்ஸ்–1%, தாதுஉப்புகலவை–1 %, உப்பு–1 % சேர்த்து கொடுக்க வேண்டும். காலையில் 3 கிலோ கலவையும் மாலையில் 3 கிலோ கலவையும் கொடுக்கப்படுகிறது. இங்குள்ள கலப்பின பசுக்கள் – ஹெச்.எப். 10 லிட்டர் பால் கொடுக்கின்றது – ஆசிரியர்).

ஆட்டுக்கு நாய் கடித்தால் நாயுருவி தழையை நல்லெண்ணையில் சின்ன வெங்காயத்துடன் வதக்கி கொடுத்தால் நாய்கடி புண் சரியாகும்.

சரிதா– கடலூர்

## ஏகாம்பரத்தின் பூச்சி விரட்டி

மஞ்சள்பொடி 1 கிலோ, மிளகாய் தூள் 1 கிலோ, வேப்பங்கொட்டைதூள் 3 கிலோ, சாம்பல் 3 கிலோ, பெருங்காயம் 200 கிராம், ஆட்டு சாணம் 5 கிலோ, இவைகளை 10 லிட்டர் பசு மாட்டு கோமியத்தில் கலந்து இத்துடன் 2 சோற்றுக்கற்றாழை, ஒரு யானைநெருஞ்சிசெடி சாறு சேர்த்து 100 லிட்டர் நீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். தூத்துகுடியில் 23.8.2015 அன்று நடைபெற்ற இயற்கை வேளாண்மை கருத்தரங்கில் பகிர்ந்து கொண்டது.

திரு. ஏகாம்பரம்
மேல் சேவூர்அஞ்சல்
செஞ்சி தாலுகா
விழுப்புரம் மாவட்டம் –604 306
செல்–9095974287